# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்.)

ஒரு பிராணியைச் சொல்வதினால அது தன் தாழ்ந்த ஜென்மத்திலிருந்து உயரக் கூடும் வழியில் அதைத் தடுக்கிறீர்கள் ஆகையால் ஒன்றையும் கொல்ல வேண்டாம்.

ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் அநியாயமினாலாவது, பலவந்தத்தினாலாவது, மோசத்தினாலாவது பிடுங்கிக் கொள்ளக்கூடாது.

வாக்குச் சுத்தத்தினின்றே மனச் சுத்தமுண்டாகிறதனால் பொய் சொல்லவாவது, அவதூறு பேசவாவது வேண்டாம்.

புத்தியை மயக்கும் பானங்களையும், மருந்துகளையும் விலக்குங்கள். செவ்வையான உடம்பும் தெளிவான மனமும் உடையவர்களுக்குத் திராவை நாம் வேண்டியதில்லை.

மறு தாரத்தைக் கனவிலும் நினைக்க வேண்டாம். வேறு அநீதியான சிற்றின்பங்களினின்றும் விலகுங்கள்.

இவ்விதமாக புத்தர் தாய், தந்தை, குழந்தை, நேசர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப் பேசினார். விஷயங்களினின்றும் தம் மனதை விடுவிக்க முடியாதவர்கள் தான தருமங்களைச் செய்து கொண்டு சுத்தமும், மரியாதையும், பொறுமையும், கருணையும் உள்ளவராயிருந்து உயிர்களையெல்லாம் தன்னுயிர்போல் நேசித்துக் கொண்டு எப்படி வாழலாமென்பதைப் பற்றிச் சொன்னார். ஒருநாள் காலையில் ராஜகிருகத்தில் வேலுவனத்தருகில் அவர் உட்கார்ந்து கொண்டிருக்கையில் சிகாலனென்ற குடியானவன் ஸ்நானம் செய்து பூமிக்கும், ஆகாயத்திற்கும், நான்கு திக்குகட்கும் வணங்கி அவ்வாறு திக்கு கட்கு அரிசியை வாரி இறைத்ததைக் கண்டு நண்பனே! ஏன் இப்படி வணங்குகிறாயென்று கேட்க, அவன் ஐயா! இது எங்கள் வழக்கம்; ஒவ்வொரு காலையிலும் வேலையாரம்பிக்கு முன் ஆகாயம் பூமி நான்கு திக்குகளினின் றும் தீமையை விலக்க இவ்விதம் செய்ய எம் முன்னோர்கள் கற்பித்தார்கள் என்றான். புத்தர் நண்பனே! அரிசியை இறைக்க வேண்டாம்; எல்லார்க்கும் அன்பான எண்ணங்களையும், செய்கைகளையும் வாரி இறை; சூரியன் உதிக்கும் கிழக்கைப்போல் தாய் தந்தையர்களுக்கும், உயர்ந்த வஸ்துக்களைக் கொடுக்கும் தெற்கைப் போல் ஆசிரியர்க்கும், ஒவ்வொரு தினத்தின் முடிவிலும் சூரியன் அழகாயும், சாந்தமாயும் பிரகாசிக்கும் மேற்கைப்போல் மனைவி குழந்தைகட்கும், வடக்கைப்போல் சிநேகிதர்கட்கும் பந்துக்களுக்கும் கீழேயுள்ள தாழ்ந்த பிராணிகளுக்கும் மேலேயுள்ள தேவர்களுக்கும் மகாத்மாக்களுக்கும் அன்பான எண்ணங்களையும், செய்கைகளையும் வாரி இறை; அப்பொழுது ஆறு ஸ்தானங்களும் பத்திரமாயிருக்கும்; தீங்கெல்லாம் பறக்கும் என்றார். இப்படி அவரவர் சக்திக்குத் தக்கபடி உண்மையைப் புகட்டினார். ஆனால் அவரது சிஷ்யர்களுக்கோ அவர்கள் உண்டுடுத்து வாழ வேண்டிய விதத்தைப் பற்றியும், தியானஞ் செய்ய வேண்டிய வழிகளைப்பற்றியும், இன்னும் அநேக விஷயங்களைப்பற்றியும் சொன்னார்.

இவ்விதம் அவ்விரவு முழுவதும் தர்மத்தைப் போதித்தார். அங்கு வந்திருந்த எல்லோரும் ஒருவராவது உறங்காமல் சந்தோஷத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் முடித்தவுடன் அரசன் எழுந்து அவரை வணங்கி அவர் காலை முத்தமிட்டு குழந்தாய்! உன் சீடர்களில் எல்லார்க்கும் தாழ்ந்தவனாக என்னை எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன் என்றான். யசோதரை முத்தங்களித்து பகவன் உமது வாக்காகிய அரசை ராகுல (மக)னுக்குக் கொடுக்க வேண்டுகிறேன் என்றாள். இப்படி மூவரும் அன்றிரவு நல்ல மார்க்கத்தை அடைந்தார்கள்.

### முடிவுரை.

அன்பர்களே! புத்தர் மனிதர் மேலும், மற்ற ஜீவர்கள் மேலும் வைத்துள்ள அன்பினாலே தம்முடைய திரண்ட செல்வங்களையும், பெரிய தேசத்தையும் இழந்ததினால் அவர் பெரிய தியாகியானார். அவர் கொள்கையின் மீதுள்ள பிடிப்பால் யாமிதைப் பல பெரியார் எழுதிய சரித்திரங்களைக் கொண்டு எழுதி வந்தோம். அவருடைய சரித்திரம் இத்துடன் முடிகிறது. அவர் வெகு காலம் ஜீவித்திருந்து கங்கை நதியாயும் ஊர்களிலெல்லாம் நடந்து சென்று ஏழையென்றும், செல்வனென்றும், உயர்ந்தவனென்றும், தாழ்ந்தவனென்றும் பாராமல் எல்லார்க்கும் தர்மத்தைப் போதித்து, போகிற விடமெக்கும் சாந்தமும், இன்பமும், மனவமைதியும் விளைவித்துக் கொண்டு சென்று கடைசியில் எண்பதாவது வயதில் மெதுவாக இவ்வுலகினின்றும் பிரிந்தார் என்று தெரிய வருகிறது. மனிதரது துன்பத்தில் அவருக்கிருந்த அளவற்ற கருணையும், லோக முழுதுக்கும் பரவிய அவரது அன்பும், மனிதரது நற்கதியைப் பற்றி அவருக்கிருந்த எல்லையில்லா நம்பிக்கையும், இப்பூமியின் சரித்திரத்தில் ஒப்புயர்வாய் விளக்கும் அவரது வாழ்வும், இதை வாசிப்பவரது வாழ் நாட்களின் மதியில் அவர்களுக்குண்டாகிற கஷ்டங்களிலிருந்து தேறுதலைக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பிரிவு-6-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி 'நவஜீவன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய வாழ்க்கை விபரமாவது:—

என்னுடைய வாழ்நாளில் பிர்ம்மச்சரிய ஆச்சிரமத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் தீவிரமாக யோசித்த சந்தர்ப்பத்திற்கு வந்துவிட்டேன். எனக்கு விவாகமான து முதல் ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டுமென்றும் ஸத்தியத்தை நேசிப்பதில் சம்சாரத்தை நேசிப்பது ஒரு அம்சமாமென்றும் நான் நினைத்து வந்தேன். என்னுடைய சம்சாரத்தின் விஷயத்தில்கூட பிர்ம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணம் தென்னாப்பிரிக்காவில் தான் எனக்கு உதயமாயிற்று. எந்த சந்தர்ப்பத்தினால், அல்லது எந்தப் புத்தகத்தைப் படித்ததனால் என்னுடைய புத்தியில் இந்த எண்ணம் உண்டாயிற்றென்று இப்பொழுது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. நான் ஏற்கெனவே பிரஸ்தாபித்திருக்கும் ராய்சந்த்பாயின் செல்வாக்கே இதற்கு முக்கிய காரணமென்பது என்னுடைய ஞாபகம். அவருடன் நான் செய்த சம்பாஷணையின் விவரம் இன்னும் என் ஞாபகத்திலிருந்து வருகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் மிஸஸ் கிளாட்ஸ்டனுடைய பதிபக்தியை அவரிடத்தில் நான் சிலாகித்துச் சொன்னேன். மிஸ்டர் கிளாட்ஸ்டன் காமன்ஸ் சபையில் வேலையாகவிருக்கும் காலத்திலும் அவருக்குத் தேத்தண்ணீரைத் தானே தயாரிக்க வேண்டுமென்று அவருடைய மனைவி வற்புறுத்தவாரென்றும், இந்தப் பிரபல தம்பதிகளுக்குள் இது வழக்கமாக ஏற்பட்டு, அவர்களுக்குக் கிரமமாகவிருக்கும் சம்பிரதாயம் ஏற்பட்டு விட்டதென்றும் நான் படித்திருந்தேன். அதை மேலே நான் பிரஸ்தாபித்த கவியினிடம் தெரிவித்து, இவ்வாழ்க்கையின அன்பைச் சிலாகித்துப் பேசினேன்.

"பின்னிரண்டில் எந்த அன்பை நீங்கள் சிலாகிக்கிறீர்கள்? மிஸஸ் கிளாட்ஸ்டன் தமது கணவனை தாம் மனைவியென்றவரையில் நேசித்ததைச் சிலாகிக்கிறீர்களா? அல்லது அந்த பந்தத்தவ முறைக்கு எவ்வித சம்பந்தமுமில்லாமல் மிஸ்டர் கிளாட்ஸ்டனிடத்தில் விசுவாஸத்துடன் அவர் ஊழியம் செய்துவந்ததைச் சிலாகிக்கிறீர்களா?" என்று அவர் என்னைக் கேட்டார். மேலும் "மிஸஸ் கிளாட்ஸ்டனை அம்மாது வானவன் அவருடைய மனைவியாக இல்லாமல் அவருடைய சகோதரியாகவாவது அல்லது அவரிடத்தில் பரமவிசுவாசமுள்ள அவருடைய வேலைக்காரியாகவாவது இருந்து, அதே விசுவாஸத்துடன் அவருக்குத் தொண்டுசெய்துவந்ததாக வைத்துக்கொள்ளுவோம். அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? இவ்விதம் பிரதாக்களிடத்தில் பக்ஷமுள்ள சகோதரிகளும், எஜமானர்களிடத்தில் பக்தியுள்ள வேலைக்காரிகளுமிருந்து வரவில்லையா? உங்களுடைய வேலைக்காரர்களில் ஒருவன் உங்களிடத்தில் விசேஷ பக்தியுடையவனாயிருக்கிறானென்று வைத்துக் கொள்ளுவோம். மிஸஸ் கிளாட்ஸ்டன் விஷயத்தில் நீங்கள் திருப்தியடைந்ததுபோல் அவன் விஷயத்திலும் நீங்கள் திருப்தியடைவீர்களா? இந்த விஷயத்தை யோசித்துப் பாருங்கள்" என்று சொன்னார்.

ராய்சந்த் பாய்க்கு விவாகமாகியிருந்தது. அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது சற்று எனக்கு கர்ணகடூரமாகத் தான் இருந்தது. ஆயினும் என்னுடைய ஹிருதயத்தில் அவைகள் ஊன்றிப்பதிந்துவிட்டன. மனைவியினுடைய பக்தியைக்காட்டிலும் வேலைக்காரருடைய பக்தியானது ஆயிரமடங்கு மேலானதென்று நான் நினைத்தேன். மனைவி புருஷனிடத்தில் பக்திகாட்டி வருவதில் அதிசயமொன்றுமில்லை. அவர்களிருவருக்குள்ளும் பிரிந்துபோகக்கூடாத ஒருகட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மனைவி பக்தியுடையவளாக விருப்பது சகஜம் தான். ஆனால் எஜமானிடத்தில் வேலைக்காரனுக்கு அவ்விதமே பக்தியிருந்து வரும்படி செய்ய விசேஷ முயற்சி வேண்டும். கவி தெரிவித்த அபிப்பிராயமானது வரவர என் மனதில் பதிந்துவந்தது.

ஆகவே இனி என்னுடைய சம்சாரத்தினிடத்தில் நான் எவ்வித சம்பந்தத்தை வைத்துக்கொள்ள வேண்டும்? என்னுடைய ஆசையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்? என்னுடைய ஆசையைத் தீர்த்துக்கொள்ள அவளை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளுவதால் அவளிடத்தில எனக்குள்ள விசுவாஸத்தைக் காட்டிக்கொள்ளுவதாகிவிடுமா? நான் மிருக ஆசைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் வரையில் என்னுடைய அன்பானது ஒரு பைசாக்கூட பெறாது. எனக்கு இந்த மிருக ஆசை ஏற்படும்படி என்னுடைய மனைவி எக்காலத்திலும் என்னைத் தூண்டியதில்லையென்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் எனக்கு விருப்பமிருந்தால் பிரம்மச்சரிய ஆசிரமத்தை ஏற்றுக்கொள்ளுவது எனக்கு சுலபமானதாக இருந்தது. எனக்கு திடசித்தம ஏற்படாததும் லௌகீக ஆசையில் இருந்த பற்றுமே இதற்கு இடையூறாகவிருந்தது.

என்னுடைய மனச்சாக்ஷி என்னைத் தூண்டிவிட்டும் இருமுறை என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. என்னுடைய நோக்கமானது உயர்ந்ததாக இல்லாததால் என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. இனி குழந்தைகள் பிறக்காமல் தடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய நோக்கமாக இருந்தது. நான் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் விதத்தைப் பற்றிப் படித்திருக்கிறேன். மயக்கறிகளைய உபயோகிக்கவேண்டுமென்பதைப்பற்றிய அத்தியாயத்தில் பிரஜா உற்பத்தியை கட்டுப்படுத்த பிரசாரத்தையும் குறிப்பிட்டிருக்கிறேன். அது தாற்காலிகமாக என்மனதில் ஒருவித உணர்ச்சியை உண்டுபண்ணியபோதிலும், மிஸ்டர் ஹில் என்பவர் அவருடைய முறைகளை எதிர்த்து, தன்னடக்கத்தினால இந்த நோக்கத்தை சித்தித்துக்கொள்ளலாமென்று சொல்லியிருந்தது நியாயமானதென்று என் புத்தியில் பதிந்திருக்கிறது. அதிகக் குழந்தைகள் பிறப்பதில் எனக்கு இஷ்டமில்லாததால் என்னுடைய சரீர ஆசையை அடக்கிக்கொண்டேன். இதில் ஏற்பட்ட கஷ்டங்கள் இவ்வளவவ்வளவல்ல, நானும் என் மனைவியும் தனித்தனியான படுக்கைகளில் படுத்துக்கொள்ள ஆரம்பித்தோம். வேலை செய்து களைத்துப்போன பிறகே படுக்கைக்குச் செல்லுவதென்று நான் சங்கற்பித்துக்கொண்டேன். இந்த முயற்சிகளெல்லாம் அதிகப் பலனைக் கொடுக்கவில்லை. இவைகளில் எனக்கு ஏற்பட்ட தோல்வியே முடிவில் நான் இதில் வெற்றி பெறுவதற்கு அனுகூலமாக இருந்தது.

1906-ம் வருஷத்தில்தான் நான் உறுதியாக இந்தக் கொள்கையைக் கைக்கொள்ள சாத்தியப்பட்டது. அப்பொழுது சத்தியாக்கிரகம் ஆரம்பமாகவில்லை. அதைப்பற்றிய சிந்தனையும் எனக்கு அப்பொழுதுஇல்லை. போயர் யுத்தத்திற்குப்பிறகு நேட்டாலில் ஸுலு கலகம் ஏற்பட்டகாலத்தில்தான் ஜோஹான்ஸ்பர்க்கில் வக்கீல் தொழில் செய்து கொண்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் நேட்டாலில் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் நினைத்தேன். என்னுடைய உதவியை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்ட விவரத்தை அடுத்த அத்தியாயத்தில் காணலாம். ஆனால் அந்த வேலையானது தன்னடக்க முயற்சியைப்பற்றி என்னை சிந்திக்கச் செய்தது. என்னுடைய எண்ணங்களைப்பற்றி என்னுடைய சகோதர ஊழியர்களிடம் நான் விவாதித்து வந்தேன். பிள்ளைகளைப் பெற்று அவைகளை சம்ரக்ஷிப்பதற்கும் பொது ஊழியத்திற்கும் பொருத்தமில்லையென்ற உறுதியான புத்தி எனக்கு ஏற்பட்டது. கலகத்தை அடக்குவதற்காக என்னாலியன்ற கைங்கரியத்தைச் செய்ய ஜோஹான்ஸ்பர்கில் இருந்த என்னுடைய ஜாகையைக் கலைக்கவேண்டியிருந்தது. நான் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்வதாகச் சொன்ன ஒரு மாதத்திற்குள் நான் வெகு நன்றாக அலங்கரித்துவைத்திருந்த வீட்டை நான் கைவிட வேண்டியதாயிற்று. என்னுடைய சம்சாரத்தையும், குழந்தைகளையும் போனிக்ஸுக்கு அழைத்துப்போய், நேட்டால் படையுடன் சேர்ந்திருந்த இந்திய ஆம்புலன்ஸ் என்ற படைக்குத் தலைமை வகிக்க வேண்டியதாயிற்று. அந்தக்காலத்தில் பல சங்கடமான சந்தர்ப்பங்களில் நாங்கள் செல்லவேண்டியதாயிருந்தபோது, பொதுஜன சமூகத்திற்கு இவ்விதம் நான் ஊழியம் செய்யவேண்டுமானால் குழந்தைகளுக்கும், செல்வத்திற்கும் ஆசைப்படுவதை விட்டு வானப்பிரஸ்தனாகிவிட வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

கலகமானது 6-வாரங்களுக்கு அதிகமாக நடைபெறவில்லை. இருந்தாலும் என்னுடைய வாழ்நாளில் இந்த சொற்பகாலம் வெகு விசேஷமானதென்று சொல்லவேண்டும். பிரதிக்ஞைகளைக் காப்பாற்றவேண்டிய அவசியம் முன்னிலும் அதிகமாக எனக்குப் புலப்பட்டது. பிரதிக்ஞையானது உண்மையான சுதந்திரக்கோட்டையின் கதவை அடைப்பதற்குப் பதிலாகத் திறந்துவிடுகிறதென்று நான் கண்டுகொண்டேன். எனக்கு திடபுத்தியில்லாததாலும், என்னிடத்திலாவது, ஆண்டவனுடைய கருணையிலாவது எனக்கு நம்பிக்கையில்லாமல் சந்தேகமாகிய ஸாகரத்தில் நான் அணைக்கப்பட்டிருந்தாலும இதுவரையில் என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. பிரதிக்ஞை செய்துகொள்ள மனிதர்கள் மறுப்பதால் அவர்கள் தூண்டுதலுக்கு ஆளாகிறார்களென்றும், ஒரு பிரதிக்ஞையில்கட்டுப்பட்டிருப்பதுதான் உண்மையான ஆபத்தினால் விரத விவாக தர்மத்தை அனுஷ்டிப்பதாகுமென்றும் நான அறிந்தேன். "ஒரு காரியத்தைச்செய்ய வேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தபோதிலும், அதைச் செய்வதாக நான் பிரதிக்ஞை செய்து

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சுற்றுபிரயாணத்தின் அவசியம்.

### புதிபதிட்டங்களுக்கு வழிகாட்டியாகும்.

### நாடார்மகாஜன சங்கத்தார் முயற்சிக்கவேண்டும்.

(திருமேனிநாதன்)

நமது நாடார்மகாஜனசங்கம் லாட்டரிச் சீட்டின் பிரசார கிளர்ச்சியும், சென்னை சட்டசபைத் தேர்தல் கிளர்ச்சியும், நம்குலப்பிரதிநிதியாக சென்னை சட்டசபைக்கு ஸ்ரீமான் சௌந்தரபாண்டியநாடாரவர்களை நியமித்திருக்கும் சந்தோஷ ஆரவாரப் பாராட்டுதலும் நம் மகாஜனங்கள் மத்தியில் அமைந்திருக்கும் இது சமயத்தில், நம் குலாபிமான முக்கியஸ்தர்களின் சுற்றுப் பிரயாணம் அவசியமாகும். இதைப்பற்றி நாடார்மகாஜன சங்க நிர்வாகிகள் நன்காலோசனை செய்து ஒரு திட்டம் வெளியிடுதல் நலமாகும்.

மகாஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் பாண்டியநாடார் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் ஆகிய இம்மூன்று கனவான்களும் இச் சுற்றுப்பிரயாணத்திற்கு முக்கியஸ்தர்களாகப் புறப்பட்டு வருதல் நற்பயனூட்டுமென்பது துண்மை. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்கள் லாட்டரிச்சீட்டு பிரைஸ் எடுப்பதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னிருந்தே, தமது சொந்த ஜோலியையும் விட்டு, குலாபிமானத்துடன் நம் மனோர்கள் வசிக்கும் பிரதேசங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள நம் குலத்தவர்களிடம் தாம் பொறுப்பேற்று நடத்த முற்பட்டிருக்கும் காரியமாகிய லாட்டரிச் சீட்டிக்கு எல்லோரும் ஒத்தாசை செய்தாலன்றி காரிய சித்தியடைய முடியாதென்றும், ஆகையால் குலாபிமானத்துடன் சங்கத்திற்கு இது திட்டத்தில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதற்கிணங்கி எல்லோரும் தங்களாலியன்ற மட்டும் ஒத்துழைக்க லாட்டரிச் சீட்டு ஒருவாறு வெற்றியுடன் நடந்தது குறித்தும் அவர்களிடையே நம் பாண்டிய நாடாரவர்கள் மீண்டும் மகாஜன சங்கம் சார்பாக ஒரு சுற்றுப்பிரயாணஞ் செய்யவேண்டியது அத்தியாவசியமென்று கோருகிறோம்.

அதுபோல் ஸ்ரீமான் சௌந்தரபாண்டியநாடாரவர்களும் இது சமயம் நம் மகாஜனங்கள் மத்தியில் சுற்றுப்பிரயாணஞ் செய்யவேண்டியது அவசியமென்பதை விரித்து எழுதத் தேவையில்லை.

முன்போல் நம் மகாஜனங்கள் மத்தியில் நல்ல கிளர்ச்சிசெய்து குலாபிமான உணர்ச்சியை யுண்டாக்க வேண்டுகிறோம். கிளர்ச்சியின் பயனாய் பொதுவாய் நம்குலத்தினருக்கும் குறிப்பாக நம்குல வாலிபர்களுக்கும் நல்ல உணர்ச்சியுண்டாகிபல பொதுஜன நன்மைக்கான காரியங்களிலீடுபடும்படியாகத் தூண்டுதலேற்படும்.

இப்போது நம்குல முன்னேற்றமான காரியங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கும் குலாபிமானிகளுக்கும் முக்கியமாக நம்குல வாலிபர்களுக்கும் இவருடைய நல்வரவு மகா சந்தோஷத்தைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாருடன் நெருங்கிப் பழகி, அவருடைய குலாபிமானப் பெருக்கையும் பேச்சு வன்மையையும், பிரபுத்வம் பாராட்டாது சாதாரணமாக எல்லோரிடமும் ஓரே மாதிரியாய் அன்புடன் நடந்து கொள்ளும் நற்சுபாவத்தையும் அறிந்தவர்கள் அவரை வரவேற்று உபசரித்து, அவர்கோரும் பொதுநல திட்டத்திற்குத் தங்களாலியன்றளவு உழைத்து ஆதரவுகாட்டப் பின் வாங்க மாட்டார்களென்று நம்புகிறோம்.

இனி, டானியல் தாமஸ்நாடாரைப் பற்றி எழுதும் போதே ஒருவித புது உணர்ச்சி உண்டாகிறது. இவரை திருநெல்வேலி ஜில்லா நன்கு அறியும். இஜ்ஜில்லாவிலுள்ள பிரபலவக்கீல்களில் ஒருவர். இவர் கிரிமினல் வழக்குகளில் வாதிப்பதிலும், பிரதிவாதி பக்கம் ஆஜராகி அக்கட்சிக்காரர்களுக்கு அனுகூலம் தேடிக்கொடுப்பதில் மகாசாமர்த்திய ரென்பது திருநெல்வேலி ஜில்லாவின் பொதுஜனவாக்கு. இவரிடத்தில் கிறிஸ்தவ நாடார்களைப் போல பதின்மடங்கு இந்து நாடார்களுக்கு அபிமானமுண்டு. இவர் நாடார்களின் பல பொதுக்காரியங்களுக்கு ஜெயத்தை நாட்டியிருக்கிறார். இந்து நாடார்களும் தங்களுக்குள்ள ஆழ்ந்த அபிமானத்தை, சேர்தலின்போது இவருக்காக வேலைசெய்து காட்டினார்கள். இவர்களும், நம்குல முன்னேற்றத்தில் மத வித்தியாசமின்றியிருந்துசாதிப்பதிலுள்ள பலாபலன்களை நன்கு அறிந்து தென்னாட்டில் ஏற்கனவே நடைபெற்ற நம் ஜாதிய மகாநாடுகளுக்குத் தலைமை வகித்திருக்கிறார். இவர் ஒரு புராட்டஸ்டெண்டு கிறிஸ்தவ நாடாரானாலும் ரோமன் காதலிக் கிறிஸ்தவநாடார்களும் குலாபிமானத்தையே பெரிதாகக்கருதி சட்டசபைத் தேர்தலின்போது இவருக்கே ஓட்டுக் கொடுத்தார்கள். ஆகவே ஸ்ரீமான் டானியல்தாமஸ் நாடாரவர்கள், தமக்கு தேர்தலின்போது பலவகையிலும் ஒத்தாசை செய்தவர்களுக்குத் தனித் தனியே நன்றி செலுத்துவதற்கேதுவாகவும், அதற்குப்பதிலாக ஆங்காங்கு நம் குலாபிமானிகள் கூறும் அன்பான ஆசியைப் பெற்றுவர ஏதுவாகவும் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டியது அவசியமாகும்.

ஆகவே இம்மூன்று கனவான்களும் ஒரு சுற்றுப்பிரயாணத்தில் கலந்து கொண்டு இது சமயம் வெளிவரவேண்டியது அவசியத்திலு மவசியமாகும். பொதுஜன வேலை எனினும் தாங்கள் கோரும் காரியத்திற்காக மட்டும் பொது ஜனங்கள் மத்தியில் வருவது வழக்கமாயிருக்கிறதென்பதின்றி எப்போதும் நாங்கள் பொது ஜனங்களிடையே வரத்தயாராக விருக்கிறோமென்று காட்டிக்கொள்ளும் பொருட்டு கட்டாயமாக இம்மூன்று கனவான்களும் இதுசமயம் வெளிவரவேண்டும்.

இச் சுற்றுப்பிரயாணத்திற்கு ஏற்பாடானால், ஏற்கனவே வசூலாகாமல் பாக்கியிருக்கும் மகாஜன சங்க அங்கத்தினர்சந்தா, தலைக்கட்டுவரி முதலியவைகளை வசூல் செய்யவும் ஏதுவாகும். மேலும் தற்காலத்தில் தேசிய ராஜீயத் தலைவர்கள் சுற்றுப்பிரயாணத்திற்கு வரும்போது உபசாரப் பத்திரத்துடன் தலைவர்கள் அபிமானத்திட்ட நிதிக்குப் பொதுக் காரியத்தைத் திறம்பட நடத்திக் கொண்டு போதற்கனுகூலமாக, பணமுடிப்புகள் கொடுப்பதுவும் வழக்கமாயிருக்கிறது. அதுபோல் நம் குலத்தலைவர்களும், திட்டம்போட்டு திசை குறித்து பிரயாணத்திலிறங்குவார்களானால், நம்குல வாலிபர்களுக்குள் ஒரு புதிய கிளர்ச்சியுண்டாகி ஆங்காங்கு தங்களால் இயன்றளவு ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக வசூல் செய்து தலைவர்களிடம் சமர்ப்பிக்கவும் ஏதுவாகும். இவ்வழி நம்குலத்தவர்களால் இதுவரை கையாடப்படவுமில்லை; நம் குலத்தவர்களும் இப்படி நீண்ட பிரயாணத்தில் திட்டம் போட்டு வெளிக் கிளம்பினதுமில்லை. ஆகவே இது சமயம் நம் மகாஜன சங்க நிர்வாகிகள் இம்முறையை சீர்தூக்கிப்பார்த்து பிரயாணத்திற்கு ஏற்பாடுசெய்வார்களானால் ஒரு புதிய பண வருமானத்திற்கும் வழிகாட்டியவர்களாவார்கள்.

இப்படித் திட்டம் போடுவதிலும் முதலில் ஜில்லாவாரியாகப் போவதற்கு பிரித்து ஏற்பாடுசெய்து ஒவ்வொரு ஜில்லாவிலும் மொத்தம் தாமதிக்கக் கூடிய நாட்களை நிர்ணயித்து எந்தெந்த ஊர் வழியாகப் புறப்பட்டு வருகிறோமென்ற திசை குறித்து ஆங்காங்குள்ள உறவின் முறைகள் கிளைச் சங்கங்கள் வாசகசாலைகள் குலாபிமானிகள் முதலியவர்களுக்கு கடிதங்கள் மூலம் தெரிவித்து தங்கள் பிரயாணத்தைத் தலைவர்கள் நடத்த ஏற்பாடு செய்தால் நாம் மேற்கூறிய புதிய முறையும் நல்ல பலன் சித்திக்க ஏதுவாகும். ஆகையால் நாடார் மகாஜன சங்கத்தார் இது விஷயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

---

## நங்குல மித்திரனும் நண்டர்களின் சிந்தனையும்.

இம் மகுடம் பூண்டு யான்வரைய முற்பட்டதின் நோக்கமென்ன வெனின், நங்குல மித்திரனைப் பற்றி சில நண்பர்கள் பல வாறாகத் எண்ணுவதினாலேயாம். அவை யாவையெனில் சிலர் மித்திரனில் நம குலத்தைப்பற்றிய வியாசங்களே குவிந்து கிடக்கின்றனவெனவும், பல ராஜீய விஷயங்களோ தேசீய சமாச்சாரங்களோ வரையப்படவில்லை என்றும், இன்னும் சிலர் தாங்கள் அனுப்பும் வியாசங்களை மித்திரன் பிரசுரிக்கவில்லை என்றும் இவ்வாறு பலவாறாகக் குறை கூறி வி. பி. யையும் பெற்றுக்கொள்ளாமல் திரும்பியனுப்பி விடுகின்றனர். இஃது மித்திரன் அபிவிர்த்திக்கு இடையூறாகுமேயன்றி அவர்கள் கோரும் வழியிற் கொண்டு செல்லாதென்பது தெளிவு. 13 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட நம் குலத்தினருக்கு தனது ஜாதீயப் பெயரோடு வர்டாமணி விளக்காய் வாரத்துக்கொரு முறை வெளிவந்துலாவுவது நாடார் குல மித்திரன் ஒன்றே என்பது யாபேரும் நன்கறிந்த விஷயம். பத்திரிகையை யபிவிர்த்திக்குக்கொண்டு வருவது அதை ஆதரிக்கும் சந்தாதார்களைப் பொறுத்ததே. நம்பாரதகண்டத்தில் நந்தமிழ் மொழியில் ஏனைய பத்திரிகைகள் வெளிவந்துலாவுகின்றன வெனினும், நம் குறைகளைக் காருண்ய கவர்ன்மெண்டார்க்கு அப்போதைக்கப்போது எடுத்துரைப்பதும் ஆங்காங்கு நடைபெறும் நம் சங்க விஷயங்களையாபேரும் அறியும் பொருட்டு வெளியிட்டு வருவதும் நம் மித்திரன் ஒன்றேயாம். இந்நிலையறிந்த அபிமானிகள், சிறந்த அரிய விஷயங்களோடு மித்திரனை வெளிவரச் செய்வது நம் ஒவ்வொருவர் கையிலுமன்றோவிருக்கிறது! பொருளின்றி என்னும்? இஃதை யறிந்தே மித்திரன் அதிபரும் நாடார்குல மித்திரன் க்ஷேமநிதி தர்மப்பண்டு என லாட்டரி ஒன்று நடத்தி மித்திரனுக்கென ஓர் தொகையை ஒதுக்கி வைத்து மேலவருடத்தில் பன்னிரண்டு பக்கங்களோடு வாரமிருமுறையாக வெளியிட உத்தேசித் திருக்கின்றனர் என நம்புகிறோம். இவரின் முயற்சி நன் முயற்சியாருக! அன்பர்காள்! நாம் ஒவ்வொருவரும் இந்த லாட்டரி சீட்டை ஆதரித்து வெற்றியுடன் நடைபெறச் செய்யவேண்டுமென்பதை வேண்டுகிறேன். குறிப்பு:—இவ்விஷயத்தை யான் வெளியிட்டதைப் பற்றி நண்பர்களுக்கு வருத்த மிருப்பினும் பொறுத்துக்கொள்ள தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உப. சி. மா. ராயப்பநாடார்
சிலோன்

---

## தூத்துக்குடி சண்முகவேல் வாசகசாலை.

30–1–27ல் இவ்வாசகசாலையின் கூட்டமொன்று மகா-ள-ள-ஸ்ரீ அ. ச. மாயக்காளை நாடார் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் ஸ்ரீமான் சி. ச. மலையரச நாடார் அவர்கள் "மகாத்மா காந்தியும் கதரும்" என்னும் பொருள் பற்றி, நாட்டின் வறுமைப்பிணியைப் போக்கவும், ஆண் பெண் மக்களனைவரும் சுயமரியாதையுடன் வாழ்வதற்கும் ஏற்றது கதர்தான் என்றும் ஒவ்வொருவரும் வைராக்கியமாக அந்நிய ஆடையை நீக்கி விட்டு உடனே கதரணிய வேண்டுமென்றும் விரிவாக உபந்நியாசித்தார். அதே பொருள்பற்றி ஸ்ரீமான்களான அரி. அ. கு. துரைச்சாமி நாடார், செல்வபதி நாடார், அய்யம்பெருமாள்நாடார், வைகுண்டநாடார் ஆகியவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தி சபை இனிது கலைந்ததெனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## ஸ்காலர்ஷிப் நிதி.

### சொத்துக்கள் வாங்குவது தான் சிறந்தவழி.

(மதுரை நாடார்ஊழியப் பிரசார சபையிலிருந்து.)

III

நாடார் மகாஜனங்களே!

நமது ஸ்காலர்ஷிப் நிதியானது எக்காலமும் அபிவிர்த்தியுடனும் சிறப்பாகவும் நடைபெற வேண்டுமானால் அதற்காதரவாக மதுரை டவுன் கடை, வீடு, கிட்டங்கி முதலிய சொத்துக்கள் தான் வாங்கவேண்டும்.

அவைகளின் வாடகை வருமானத்தைக்கொண்டு ஏழைமாணவர்களின் கல்வியபிவிர்த்திக்காகச் செலவு செய்ய வேண்டும். நம்முன்னோர்கள் தேவாலயம், வித்தியாசாலை முதலிய தர்ம கைங்கரியங்களுக்காக செய்து வைத்திருக்கும் மேன்மையான சிறந்த வழி இதுதான்.

அதைப்பின்பற்றியே நாமும் நடக்கு மதுரையில் நடைபெறப் போகும் ஜெனரல் மீட்டிங்கில், ஸ்காலர்ஷிப் நிதிக்கு "சொத்துகள்தான் வாங்க வேண்டும்" என்று நாம் எல்லோரும் ஒரே மனதாய் ஏகோபித்து தீர்மானித்து, நமது நாடார்ஜன சமூகம் முன்னேற்றமடைவதற்கு ஆதாரமாகவிருக்கும் கல்வித் தருமத்தைப் பலப்படுத்தி பிரகாசிக்கும்படி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சொத்தே தருமத்தை விருத்தி செய்யும் கற்பகதரு; அதுவே தருமத்தின் ஆதாரவு; அதுவே நம்மகாஜன சங்கத்திற்கும் நம் ஜாதிக்கும் உயர் நிலையை அளிப்பது; பெருமையைக் கொடுப்பது என்னும் உண்மைகளை மனதில் ஊன்றிக் கவனித்து, சொத்துத்தான் அவசியம் வாங்க வேண்டுமென ஒவ்வொருவரும் ஆசைகொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.

---

## ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களின் கடிதம்.

பலவித அசந்தர்ப்பங்களினால் நமது பொது மக்கள் ஊடே சென்ற சில காலமாக நெருங்கிப் பழகுவதற்கு எனக்கு சவகாசமில்லாதிருந்தது. நமது ஜன சமூகப் பிரதிநிதியாக என்னை கவர்ன்மெண்டார் சென்னை சட்டசபைக்கு நியமித்ததிலிருந்து சமூக ஊழியம் எனது கடமையாகிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன்.

---

## வருடோற்சவம்.

26—1—27-ல் கோவில்பட்டி தாலுகா சோளபுரம் பத்திரகாளியம்மன் தேவஸ்தான ஹிந்து நாடார் ஸ்கூல் வருடக் கொண்டாட்டம் கோவில்பட்டி ரேஞ்சுசரகம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆவ்ஸ்கூல்ஸ் ஸ்ரீமான் டி. சிவசைலம்பிள்ளை அவர்கள் எம். ஏ. யல். டி. அக்கிராசனத்தின் கீழ் கூடியது. ஸ்ரீலிய மாணவிகளின் சம்பாஷணைகளும், மற்றும் மாணவர்களால் நாடகங்களும் நடைபெற்றன. பின்பு மகா-ள-ள-ஸ்ரீகளான ஸ்கூல் ஹெட்மாஸ்டரவர்களும், சக்கயப் புலவரவர்களும், முத்தையப் புலவரவர்களும் முறையே கல்வி, பெற்றோர் கடமை, இராமயணம் பூர்வ பகுதி ஆகிய விஷயங்கள் பற்றி நன்கு பேசினர். முடிவில் அக்கிராசனாதிபதி அவர்கள் மலர்ந்த முகத்துடன் ஷை ஸ்கூல் நல்லவழியில் செவ்வையாக நடைபெறுவதற்கான முறைகளை வெகு விமரிசையாகப்பொழிந்தனர். பின்ராஜ வாழ்த்துடன் சபை கலைந்தது என்று ஸ்கூல் மானேஜர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹு தை மீ ௨௰௫ ௳

## எதிர்பார்த்த கூட்டம்.

நாடார் மகாஜனங்கள் வெகு நாளாக மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நாடார் மகாஜன சங்கம் விசேஷக் கூட்டம் நாளது பிப்ரவரி மீ 12௳க்கு மாசி மாதம் 1௳ சனிக்கிழமை யன்று கூடப்போவதாக அறிகிறோம். இக்கூட்டத்திற்கு மகாஜன சங்கத்தின் அங்கத்தினர்களாயிருப்பவர்கள் மட்டுமே விஷயாலோசனையில் கலந்து கொள்ள முடியும். மற்றவர்களும் விஷயாலோசனையில் கலந்து கொள்ள வேண்டுமானால் உடனே அங்கத்தினர் கட்டணத் தொகை செலுத்தி அங்கத்தினராகிக் கொண்டால் சட்டப்படி நடபடிக்கைகளில் கலந்து கொள்ளும் உரிமையுடைத்தாராவர்.

இக்கூட்டம் ஏழை மாணவர்கள் சகாயநிதியை எப்படி விருத்தி செய்து பயோகப் படுத்தலாமென்பதைப்பற்றி ஆலோசனை செய்வதற்காகவே அவசரமாகக் கூட்டப்படுகிறது எல்லாவித அபிப்பிராயமுடையவர்களும் ஒன்று கூடி ஒற்றுமையுடன் முடிவு செய்யக் கூடிய மிக முக்கியமான விஷயம் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

இந்நிதியைச் சொத்து வாங்கி விருத்தி செய்வது தான் நலமென்றும், ரொக்கமாக வைத்து விருத்தி செய்வதுதான் நலமாகுமென்றும் இரண்டுவித அபிப்பிராயங்களிருந்து வருவது அனைவரும் அறிந்த விஷயம். இது சம்பந்தமாக நமக்குத் தினசரி கடிதங்கள் வந்து குவிகின்றன. ஒருவர் சொத்து வாங்க வேண்டுமென்பதற்குரிய பல காரணங்களைச் சொல்லுகிறார்; மற்றொருவர் ரொக்கமாகயிருக்க வேண்டிய பல காரணங்களை விளக்குகிறார். இவ்விரண்டைத் தவிர வேறு விசேஷமொன்றுமில்லை. இவ்வபிப்பிராயங்களை நாம் தாராளமாக வெளிப்படுத்தி வந்திருக்கிறோம். மற்றும் பல நண்பர்களுடைய கடிதங்களில், பிரசுரிக்க இவ்வாரத்தில் இடமின்மையாலும், அடுத்த வாரம் அதைப்பற்றிய கூட்டம் நடக்கப் போவதாலும் முக்கியமான சில சுருக்கிப் பிரசுரமாகியும் சில பிரசுரமாகாமல் நிறுத்தி வைக்கப்பட்டுமிருக்கின்றன. ஆகையால் சிரத்தையுள்ள அன்னவர்களெல்லாம் இக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்ய வேண்டியது அவசியமானதால் அவர்கள் ஏற்கனவே சங்கத்தின் அங்கத்தினர்களாயில்லாவிடினும் உடனே ஒரு ரூபாய் செலுத்தி விட்டால அங்கத்தினராய்விடலாமென்பதை மனதிற் கொண்டு அக்கூட்டத்திற்கு அநேகர் வரவேண்டுமென்று விரும்புகிறோம்,

இக்கூட்டம் எப்படித்தீர்மானிக்கிறதோ அப்படித்தான் தீர்மானித்த காரியங்கள் நடக்கும். எல்லாவித அபிப்பிராயமுடையவர்களும் தங்கள் தங்கள் கருத்துகளை வந்து தெரிவிக்க வேண்டும். கூட்டத்திற்கு வாராமலாவது, வர முடியாவிடின் தங்கள் கருத்துப்படி நிறைவேறும் வண்ணம் வேண்டிய முயற்சிகளைச் செய்யாமலிருந்து கொண்டாவது நாங்கள் சொன்னபடி சங்கம் செய்யவில்லை; சங்கம் இரண்டொருவருடைய இஷ்டம்போலே நடக்கிறது என்று குறை கூறுவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. சங்கத்தின் சட்ட திட்டங்களில் எதேச்சாதிகாரத்துக் கிடங்கிடையாது. பொது ஜனங்கள் தீர்மானிக்கிறபடி அதன் உத்தியோகஸ்தர்கள் செய்வார்கள். தவறாக நடந்தால் அவர்களைத் தள்ளவோ அல்லது திருத்தவோ அன்றி மற்றவர்களை நியமிக்கவோ ஜனங்களுக்கு உரிமையுண்டு. ஆகையால் சங்கமாவது, சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாவது ஜனங்களுக்கு விரோதமாக நடக்கலாமென்றஞ்ச வேண்டியதில்லை. ஆனால் நாம் வீட்டிலிருந்துகொண்டே பத்திரிகைகளுக்கு எழுதி விட்டு வருவோர், போவோர்களிடமெல்லாம் குறை கூறுவதையே பாடமாகப் படித்து கூட்டத்துக்கும் போகாமல் நின்று விட்டால், சங்கம் தீர்மானிக்கிற வழிதான் போய்க் கொண்டிருக்கும். தங்கள் தங்கள் கருத்துப்படி சங்கம் நடக்க வேண்டுமென்றால் எல்லோரும் இக்கூட்டத்திற்கு வரத் தவறக் கூடாது.

உயர்தரப் படிப்புக்கு உதவி செய்வதைப் பார்க்கிலும், குக்கிராமந் தோறும் ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குதவுவது நலமாகுமென்ற ஒரு பிரச்னையும் எழுப்பப்படுகிறது. இவ்வாறு பல விவாதத்துக்குரிய அம்சங்கள்பற்றி தோன்றுவதாலும், மற்றும் பல முக்கியமான விஷயங்கள் ஆலோசிக்க வேண்டியதிருப்பதாலும், குலாபிமானமுள்ள தலைவர்களனைவரும் வருவார்களென்று நம்புகிறோம்.

பொதுவாக இரண்டு வருஷங்களில் சமூகப் பிரசாரம் சரியானபடி நடைபெறாமல் சமூக முன்னேற்ற முயற்சி மிகவும் தளர்வுற்றிருக்கிறது. ஆகையால் மீண்டும் சரியான மூன்று பிரசாரகர்களையாவது நியமித்து ஜில்லாவுக் கொருவராகப் பிரசாரம் செய்ய வைப்பது மிகவும் அவசியமென்பது கூட்டத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களிலொன்றென்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

## குறிப்புகள்.

### கலால் மந்திரி.

கனம் ஆரோக்கியசாமி முதலியாரவர்கள் சின்னாட்களாக நாட்டிற்றிருவலம் வந்து கொண்டிருந்தார். அவருக்குரிய மரியாதைகளையும் குறைவின்றிப் பெற்றார். மதுவிலக்கைப் பற்றிய கேள்விக்கு பூர்ண மதுவிலக்கு இலட்சியத்தை இப்பொழுது மேற்கொள்ளுவது முற்றிலும் சாத்தியமில்லை; அதனை மேற்கொண்டால் மற்ற இலாகாக்களுக்குப் பணமில்லாமற்போய் விடும் என்றே பதில் சொல்லி விட்டார். அந்தோ! ஒரு குடியைக் கெடுத்து மற்றொரு குடியை வாழ வைக்க வேண்டுமோ? மற்றொன்றிலாகா நின்றுபோனாலென்ன முழுகிவிடும்? மந்திரி சம்பளங்களுக்குக் கஷ்டம்வருமென்ற அச்சமா? ஸர். பத்ரோ மீது சொற் பாணம் பொழிந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்ன செய்கிறார்? அவர் கூட்டத்துப் பத்திரிகைகள் எங்கே? சுயராஜ்யக் கட்சியார் அதிகம் வரின் குடி யொழியுமெனக் கூறிய ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் எங்கு சென்றார்? குடியொழியும் ஒழியுமென்று ஒப்பொழிவின்றி உரைத்து வந்தாரே இப்போதவர் சத்தம் கேட்கவில்லையே! நாம் என்று கதறுங் கவலையால் கண்ணை மறந்தாரா? குடியொழியுமென்ற வாக்யம் ஏழைக் குடி யழியும் என்பதாயிருக்கிறதே! சுயராஜ்யக் கட்சியின் சூட்சிகள் இன்னும் வரவரத் தெரியும்.

### அடி உதவுவதுபோல் அப்பனும் உதவான்

என்பது ஒரு பழமொழி. பெண்ணையாற்றில் ஆற்றுத் திருவிழாவில் ஏராளமான ஜனங்கள் நீராடி நித்யானந்த மாடி நிலவைக் கொண்டாடி நெடுகக் கூத்தாடி நிற்கும் வேளையில் ஆதித்திராவிடர்களை யாது காரணத்தினாலோ மற்றவர்கள் நன்றாய் படித்திருந்தார்கள். அவர்கள் அடி பொறுக்க முடியாமலோடி 1000 பேர்களைத் துணை சேர்த்துக் கொண்டு வந்து தடி, உலக்கை, ஆப்பக்கால், தீவட்டி, கத்தி முதலிய வற்றுடன் அங்குமிங்கும் எங்கும் வளைத்து அடித்து வண்டிகள், பெண்டுகள், பிள்ளைகள் என்று இரக்கம் பாராமல் நொருக்கி ஒருவர் இருவராகச் சேர்த்துக் கட்டி பிழக்து, காரி உமிழ்ந்து, எட்டியுதைத்து, ரோட்டில் சுருட்டி பலரை அறைகளில் விட்டுப் பூட்டி என்னென்னமோ வெல்லாம் செய்தார்களாம். போலீஸார் 30 ஆதித்திராவிடர்களைக் கைது செய்திருக்கிறார்களாம். நமயில் கீழ் மேலென்ற பாகுபாடுகளுள்ளளவும் இப்படிக் காரியங்கள் நடந்தே தீரும். அடங்கிக்கிடக்கும் ஒரு சமூகம் ஆக்ரமிதத்துவிட்டால் அதை அடக்க முடியாதென்பது இதனால் சிறிது விளங்குகிறது. தேவஸ்தானச் சட்டத்தைத் திருத்தும் மந்திரிகள் ஆதித்திராவிட ஜனங்கள் மனப்பான்மையை மதித்துத் திருத்தட்டும்.

### வகுப்புத் துவேஷம்.

தஞ்சை ஜில்லா போர்டில் மிஸ்டர் பன்னீர்ச்செல்வம் ஆறு வருஷம் தலைமை வகித்து பிராமணரல்லாத சமூக விஷயமாயும், ஜில்லா நன்மையின் பொருட்டுமே அதிகக் கவனம் செலுத்தி வந்திருக்கிறார். பொறாமையே உருவாய்ப் பெற்ற சில வகுப்புத் துவேஷிகள் அவரை மீண்டும் அத்தானத்திற்கு வரவிடாமற் செய்ய வேண்டியமுயற்சி செய்தார்கள். பார்ப்பனப் பத்திரிகைகளும் பரோபகாரப்பிரயத்தனங்கள் செய்தன. அண்டப் புளுகு ஆகாயப் புளுகெல்லாம் புளுகின. முடிவில் உண்மை உறுதியாயது. சத்தியம் ஜெயித்து விட்டது. மிஸ்டர் பன்னீர்ச் செல்வம் நீடூழி வாழ்க.

### பைத்தியமில்லை.

சுவாமி சிரத்தானந்தரைக் கொலை செய்த அப்துல்ரஷீத்தின் கேஸ் செஷனில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. சாட்சிகளெல்லாம் கீழ்க் கோர்ட்டில் கூறியவாறே கூறிவிட்டார்கள். எதிரி அப்துல்ரஷீத் போலீஸ் விசாரணையில் சுட்டதாக ஒப்புக் கொண்டான். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பைத்தியம் பிடித்தவன்போல் மௌனஞ் சாதித்தான். வக்கீலும் பைத்தியமென்றே வாதித்தார். இப்போது செஷனில் மௌனம் நீங்கி, தான் நிரபராதி யென்று பேசத் துணிந்துவிட்டான். டிபன்ஸ் தரப்பு சாட்சி விசாரணை பாக்கியிருக்கிறது. எதிரிக்குப் பைத்தியமுண்டா வென்று சோதிக்க லாகூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு எதிரி அனுப்பப்பட்டிருக்கிறான்.

### நிருப நேயர்களுக்கு.

நமது மித்திரன் வாரப் பதிப்பென்பதையும், எத்தனை பக்கமுடைய தென்பதையும்நோக்காது அநாவஸ்யமாய் நீண்ட பல வியாசங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவசியமான பலவியாசங்களும் தினசரி வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திருத்தியும், சுருக்கியும் பிரசுரித்து வருகிறோம். பிரசுரமாகாமல் விட்டுவிடவும் நேர்கிறது. இதனால் நிருபர்கள் தங்கள் வியாசம் பிரசுரமாகவில்லை யென்று நினைக்கிறார்களே யொழிய நமது நிலைமையை உணர்வாரதிகமாயில்லை. இத்தகைய கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு நமது பத்திரிகை 16 பக்கங்களானால் எல்லாம நன்மையாக விருக்கும். அதற்காகவே நாமொரு லாட்டரி ஏற்படுத்தியிருக்கின்றோமென்பதைப் பலரும் அறிவர். அதற்கு எல்லோரும் ஒத்தாசை செய்து பூர்த்திபண்ணி விட்டால் மித்திரன் ஒன்பதாவதாண்டில் அதிகப் பக்கங்களுடன்பல சமாச்சாரங்களையும் தாங்கும்படி செய்யலாம். ஆகையால் நமது லாட்டரியில் குலாபிமானிகளனைவோரையும் மிகுந்த கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## சென்னை சட்டசபை.

இவ்வருடம் இரண்டாங் கடவையில் கூடிய சென்னை சட்டசபையில் டாக்டர் முத்துலட்சுமியம்மாள் உபதலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க முக்கியமான சம்பவமாகும். சினுவுக்குப் படையனுப்பும் விஷயமாய் ஆலோசிக்குமாறு நடவடிக்கையை ஒத்திவைக்க இந்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்ட ஸ்ரீனிவாஸ ஐய்யங்காரின் அவசரப் பிரேரணையை கவர்னர் ஜெனரல் நிராகரித்து விட்டதுபோல் சென்னை சட்டசபையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்திஐயர் தீர்மானத்தை கவர்னர் நிராகரித்துவிட்டார். சட்டசபைகளிலும் பொதுச் சபைகளிலும் கண்டனங்கள் பலமாகத் தானிருக்கின்றன. மௌலானா முகம்மதலியும் துருப்புகளேற்றிச் செல்லும் ரயில் தண்டவாளங்களில் படுத்துக்கொள்வதாகக் கூறினார். ஆனால் துருப்புகளோ சைனாவில் பாண்டுவாத்தியத்துடன் ஊர்வலம் போய்க் கொண்டிருக்கின்றன.

பஞ்ச நிலைமையைப்பற்றிப் பலமான விவாதங்கள் நடந்து கொஞ்சம் கருணை காட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மலையாளம் மாப்பிள்ளைக் கைதிகளின் அந்தமான் குடியேற்றத் திட்டம் அழுத்தமாய்க் கண்டிக்கப் பட்டு கவர்ன்மெண்டார் பக்கம் தோல்வியுற்றது. ஹோம்மெம்பர், கனம் உஸ்மானின் பொறுப்பற்ற பேச்சு பலமாக கண்டனம் செய்யப் பட்டிருக்கிறது. ஜனப்பிரதிநிதிகளை மதித்து இத்தீர்மானம் நிறைவேறும் பொருட்டு கவர்னரும் அனுமதியளிப்பாரா?

சுமார் 140 கேள்வி உப கேள்விகள் ஜனப்பிரதிநிதிகளால் கேட்கப்பட்டு வழக்கம்போல் பதில்களும் சொல்லப் பட்டிருக்கின்றன. தேவஸ்தான சீர்திருத்த சட்டத்தைப்பற்றிய கேள்வியில் எல்லோருக்கும் திருப்திகரமான முறையில் திருத்தம் செய்யப்போவதாக கனம் மந்திரி பதிலளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அது எவ்வளவுதூரம் சாத்தியமாகுமென்பதை இப்போது சொல்வதற்கில்லை. மதத்தின்பெயரால் சமூகக் கோட்பாடுகளில் பல ஊழல்களைச் செய்து கொண்டிருக்கும் பல அக்ரமங்களுக்கும் மீண்டும வழி திறந்துவிட்டு விடாமலும், தனிப்பட்ட சில வகுப்பினர் மதவுரிமைகள் அனுபவிக்க விடாமற் தடைசெய்யப் பட்டிருக்கும் வழிகளை திறந்துவிடவும், யாதாமொரு வகுப்புக் கோயில் மடங்கள் முதலியவைகளுக்கு பங்கம் நேர்ந்து விடாமலும்உள்ள பாதுகாப்பான முறைகளிலும சட்டத்தை திருத்துவது சாலவும் நன்றே. ஸ்ரீமான் வீரய்யரை திருவல்லிக்கேணிக் கோயிலுக்கழைத்துப் போவதாகக் கூறிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இனிஅவர் என்ன சொல்வாரென்று பார்க்கவேண்டும்.

### அதிபர் சுற்றுப்பிரயாணம்.

வடஜில்லா சுற்றுப்பிரயாணத்திலிருந்த நம் மித்திரன் ஆசிரியரும், நண்பர் சர்க்கரைப்பாண்டியரும் 20-1-27ல் நம் ஊர் வந்து சேர்ந்தனர். கூடிய சீக்கிரம் இலங்கைக்குப் பிரயாணம் செய்யக்கூடும்.

# கடிதங்கள்.

## ஸ்காலர் ஷிப் நிதி.

### I

நமது பாங்கு விஷயமாய் மகாஜன சங்கத்தார் இதுவரைக்கும் திருப்திகரமாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் பாங்கின் வளர்ச்சியைப் பற்றிய சிரத்தையுடையவர்களானல் அந்தத் தொகையை உபயோகிப்பதற்குரிய உறுதியான அபிப்பிராயம் ஏற்படுமட்டும் சில மாதங்களாவது அதை நமது பாங்கில் போட்டு வைத்திருப்பார்கள். சங்கத்தார் பாங்கின் சம்பந்தமாய் தங்கள் கடமையைக் கிரமமாய்ச் செய்திருப்பார்களேயானல் பாங்கும் சங்க சம்பந்தமான தன் கடமையைக் கிரமமாய்ச் செய்தேயிருக்கும். இதைவிட்டு விட்டுச் சங்கத்தார் பாங்கு நிலைவரப்படுமுன்னமேயே அது தங்களுக்கு உதவிசெய்யவில்லை யென்று குறை சொல்வது வீண் போக்கேயொழிய வேறல்ல. அது தவழ்ந்து விளையாடும் தம்பி யொருவனை அண்ணனொருவன் தன்னை முதுகில் ஏற்றிச் சுமக்கவில்லை யென்று குறை கூறுவதற்கு ஒப்பாகும். பாங்கு டைரக்டர்கள் நமக்கு அந்நியரல்லவே.

நிற்க, ஒருநிதியைப் பத்திரப் படுத்துவதில் பண்டை காலத்து முறையைத்தான் பின்பற்ற வேண்டுமென்பது கட்டாயமா? பொதுக் காரியங்கள் அனுபவத்தால் ஸ்தாவர சொத்துக்களாலேயே ஒழுங்காய் நடைபெறுகின்றன என்று சொல்லுகிறார்கள். அவைகளுக்கு சில காலம் பணம் முட்டுவராதிருக்கவில்லையா? ஸ்தாவரச் சொத்துக்களாக நமது முன்னோர்கள் வைத்துப் போயிருக்கும் தக்ஷிணமாற நாடார்கள் பேட்டை நிர்வாகத்தைப் பார்த்தவர் எவராவது இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அந்தப் பழைய முறையையே பின்பற்ற விரும்புவரோ? நம்மைச்சுற்றிலும் எண்ணிறந்த ஹைஸ்கூல் காலேஜ்கள் வைத்து நடத்தியும், ஸ்காலர்ஷிப் பண்டுகள் நியமித்தும் எவ்வளவோ திட்டவட்டமாகத் தர்ம பரிபாலனம் பண்ணி வருகின்ற கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் எந்த முறையைக் கையாடுகின்றன வென்றாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? இரண்டுவாரத்துக்கு முன் வெளியான நமது பத்திரிகையில் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் காங்கிரசுக்குச் சொந்தமான ஸ்தாவரச் சொத்துக்களைப் பற்றிச் சொல்லி யிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஸ்தாவர சொத்தின் வாடகையானது குறிப்பிட்ட தேதியில் கிடைப்பது அரிது. அதனால் மாணவர்களின் கல்விப் பயிற்சிக்கும் இடையூறு உண்டாகும். ஆதலால் எந்த நோக்கத்துக்காக அந்த நிதி சேகரிக்கப் பட்டிருக்கின்றதோ அந்த நோக்கம் செவ்வனே நிறைவேறும்படி செய்வது பெரியோர் கடமையாகும்.

மயிலேறி பி. விசுவாசம் நாடார்,
பாளையங்கோட்டை.

### II

ஸ்காலர்ஷிப் நிதி கொண்டு வீடுவாங்குவதென்றால் ரூபாய் 50,000-க்கும் ஒரு பெரிய வீடாகவும் வாங்கலாம்; சிறு சிறு வீடுகளாக சுமார் 25 வீடுகள் அமையவும்கூடும். ஒரு வீட்டுக்கு வாடகை சுமார் ரூபாய் 20 வைத்துக் கொண்டாலும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 வாடகை வரலாம். வாடகை வசூல் செய்யவும் வாடகை சரியாக வாராதகாலத்தில் வழக்கு முதலிய சம்பவங்களால உண்டாகும் செலவும் மராமத்துச் செலவும் வீடுகள் சிற்சில சமயங்களில் காலியாய் இருக்கும் பொழுது உண்டாகும் வாடகைக் குறைச்சலும் முனிசிபல்வரிகளும் கிட்டத்தட்ட மூன்றில் ஒருபாகம் வருமானத்தில் போய்விடும். மீதியாக விருப்பது சுமார் ரூ 330. மேலும் 30 ஆண்டுகளுக்கு பின் அந்தகட்டடங்களும நிலமும் சேர்ந்து ரூபாய் 20,000க்குத்தான் மதிக்கலாம். அதிலிருந்து மொத்தமாக ரூபாய் 30,000 குறைவு ஏற்படுகிறது. இத்தகைய குறைவை நிவர்த்திசெய்யும் பொருட்டு வருஷம் ஒன்றுக்கு சராசரி ரூ 1000 சேர்த்து வைக்கவேண்டும். இது மீ 1-க்கு ரூபாய் 80-க்கு மேலாகிறது. இதிலிருந்து பொதுவாக நமக்கு செலவு நீக்கி வரும்படி 250 தான் அதிகமாய் போனால் கிடைக்குமே யொழிய அதிகம் கிடைக்காதென்றே சொல்லலாம்.

ரூ 50,000-க்கு சுமார் பத்துகோட்டை விதைப்பாட்டு நிலம் வாங்குகிறோம் என்று வைப்போம். கட்டுக்குத்தகைக்கு சுமார் 12 கோட்டை நெல் கொடுப்பார்களா? சரி அப்படியே கொடுப்பார்களென்று வைத்துக்கொண்டாலும் எல்லா நிலத்தின் பேரிலிருந்து சுமார் 120 கோட்டை நெல் கிடைக்கலாம். கோட்டை 1-க்கு ரூபாய் 20 என்றால் ரூபாய் 2400 தான் வருகிறது. மீ 1-க்கு சராசரி 200 ரூபாய் எதிர்பார்க்கலாமே யொழிய ரூபாய் 250 வரும் என்று சொல்வது எளிதன்று.

கருப்புக்கட்டிபார்வேடிக் கம்பெனியில் பங்கு எடுத்து அதிலிருந்துவரும் ஊதியத்தைக்கொண்டு ஏழைமாணவர்களுக்கு உதவி செய்யலாம் என்றும் சிலர் சொல்லலாம். அக்கம்பெனியிலுள்ள லாபம் அதில் போடப்பட்டிருக்கும் முதலுக்கு தற்போது ரொம்பவும் சொற்ப லாபத்தை கொடுக்கிறதென்று தெரிகிறது.

மேலே சொல்லிய காரணங்களை நன்றாய் சீர்தூக்கிப்பார்க்கின் பாங்கில் போடுவதே நலம். ஏனெனில் நாடார் பாங்கில் வட்டி சுமார் 8 அணா கொடுக்கிறார்கள். 50,000 ரூபாய்க்கும் மீ 1-க்கு ரூபாய் 250 யாதொரு சிரமமுமில்லாமல் கிடைக்கும்.

கா. சு. தங்கவேல்நாடார்,
ரங்கூன்.

### III

பாங்கிக்கும் சங்கத்திற்கும் இருக்கும் கசப்பை நீக்கி ஒற்றுமையுண்டாக்க வேண்டுமென நினைத்தால் நம் ஸ்காலர்ஷிப் நிதிக்கு நமது நாடார் பாங்கிலேயே பங்கு 1-க்கு ரூ 10 வீதம் 3500 பங்கு சங்கத்தின் பேருக்கே எடுத்து கொள்ளலாம். அப்படி பங்கு எடுத்துக்கொண்டால் ரொக்கமாக இருந்ததாகவும் கருதப்படமாட்டாது. சொத்து வாங்கினதாகவும் கருதப்படமாட்டாது. சங்க நிர்வாகிகள் இருவரை சங்கத்திற்காக டைரக்டர்களாக நியமிக்கும்படி நாம் பாங்கைக்கட்டாயப்படுத்தலாம். அதன் மூலமாய் பாங்கிக்கும் சங்கத்திற்கும் நட்பு ஏற்படும். சங்கத்தின் நட்பு பாங்கிக்கு ஏற்பட்டுவிடின் பாங்கியின் பூராபங்கு தொகைகளையும் ஏழு மாதத்திற்குள் சங்கம் விற்றுமுதல்செய்து கொடுத்துவிடும். பாங்குக்கு விசேஷ லாபம் கிடைக்கும். நமக்கும் அதினால் விசேஷலாபமும், அவர்கள் ஆதியில்சொன்ன 10ல் ஒருபங்குலாபமும்கட்டாயம் நமது சங்கத்திற்குகிடைக்கும் நிதிக்கு ஒருபோதும் அழிவுவராத சொத்து வருமானத்தை விட பாங்கியின் லாப வருமானம் எந்தவகையிலும் எக்காலத்திலும் குறைந்ததல்ல என்பதை ஞாபக மூட்டுகின்றேன்.

பி. எஸ். கனிபப்பன்,
நாஸரேத்.

## ஒரு திருத்தம்.

சென்றவாரம் 5-வது பக்கம் வேண்டுகோள் என்னும் தலைப்பின் கீழ் 3-வது பாராவில் நாடார்மகாஜன சங்கப் பிரசாரகர்களாயிருந்த நமது நண்பர்களெல்லாம் சிறிது காலாவது ஆனந்தமாக வேலைசெய்யவேண்டுமென்பதற்கு பதிலாக, ஆனரரியாக வேலைசெய்ய வேண்டுமெனத் திருத்தி வாசித்துக்கொள்க.

## கோப்பிநாயக்கன் பட்டி.

அக்ஷய ஹூ தை மீ 1௳ கோப்பிநாயக்கன்பட்டி பால்யநாடார் சங்க மார்கழி மாத மீட்டிங் ஸ்ரீமான் கே. வெங்கிடசுப்பு அய்யரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வி. கே. வித்தியாசாலையின் சபாமண்டபத்தில் கூடியது. ஸ்ரீமான்களான கே. வி. குருமூர்த்தி அய்யர் அவர்கள் ஜே. ஏ. பொன்னையா உபாத்தியாயர், வி. யோபு உபாத்தியாயர், பாக்கியராசன் உபாத்தியாயர் நா. க. வ. மாரியப்பநாடார் அவர்கள் யல். தவசி நாயுடு அவர்கள் ஜீ. ஸ்ரீநிவாசம் முதலியாரவர்கள் ஆகியவர்கள் முறையே யாத்திரையின் விசேஷம், மாணவர்களும் ஆசானும், பெண்கல்வி, வாலிபர் சங்கமும அதன் பிரயோசனமும், சிக்கனம், உழைப்பு, சத்தியம் என்ற அம்சங்களைக் கொண்டு தெளிவாயப் பேசினார்கள் என்று ஸ்ரீமான் ஜே. ஏ. பொன்னையா அவர்களெழுதுகிறார்.

## மீண்டும் யுத்தம் உண்டாகுமா?

(தொடர்ச்சி.)

ஜெர்மானியர்களிடம் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஓரளவு ஆற்றலும் அன்பும் உடையார்போல் விளங்கி வருகிறார்களாயினும் இவ்விரு தேசத்தவரே தங்களை இக்கோலத்துக்காளாக்கி வைத்தார்களென்பதை ஜெர்மானியர்கள் மறந்துவிடமுடியாது. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துகளை மாற்றி லகுவாக்கினாலன்றி கையெழுத்திடுவது முடியாதென்று அக்காலத்தில் ஜெர்மனியில் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றிய இரு கவர்ன்மெண்டுகளும் மறுத்துவிட்டபோது வெர்ஷேல்ஸில் ஒப்பமிடாவிட்டால் பெர்லின் பட்டணத்தில் வைத்து ஒப்பம் வாங்கப்படுமென்று பட்டவர்த்தனமாய்ப்பேசி ஜெர்மானியரைக் கலங்கப்பண்ணியவர் இங்கிலாந்தின் மாஜி பிரதம மந்திரியான லாயிட்ஜியார்ஜ் தானென்பதை யாவருமறிவர். தமது 14 சத்ய பரிபாலன விதிகளைக்கொண்டு ஜெர்மானியர்களை ஏமாந்து போகச் செய்தவர் அமெரிக்க பிரஜாதிபதியாயிருந்தவரும் ஜெர்மனியின் தோல்விக்கே முக்கிய காரணராயிருந்தவரும் காலம் சென்றுபோனவருமான டாக்டர் வில்ஸன் என்பதும் நன்கு தெரிந்த விஷயமே. பின்னால் ரைன் பிரதேசத்தில் பிரஞ்சுத்துருப்புகளாலும் ராணுவ அதிகாரிகளாலும் ஜெர் மானியர்கள் அடைந்துவந்ததான பல இழிவான செயல்கள் அவர்கள் உள்ளத்தில் உண்டாக்கியிருக்கும் ரணம் இன்னும் ஆறாமலேயிருந்து கொண்டிருக்கையில் இப்போ ஜெர்மானியர்கள் வேவுபார்க்கும்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களென்று அவர்கள் மேல் பழிசாட்டி விசாரணைக்குக் கொண்டுவரும்படி பலரை இப்போ கைது செய்திருப்பது புண்ணில் கோலிட்டாட்டுவது போலவே ஜெர்மனியில் உணரப்படுகிறது. தங்களோடு நின்று யுத்தம் செய்யக் கடமைப்பட்ட இத்தாலியர் சில காலம் நடு நிலைமை வகித்து பின்னால் தங்கள் எதிரிகளோடு சேர்ந்து கொண்டது ரோகச் செயலை ஜெர்மானியர்கள் என்றும் மன்னிக்கக் கூடிய குற்றமாகக் கருதமாட்டார்கள். ருஷியாவை நோக்கின் மேல் அரங்கத்தில ஜெர்மானியர்கள் தங்கள் முழுப்பலத்தையும் திரட்டிச் சண்டையிடக் கூடாதபடி அவர்களுடைய சேனையின் மிகுதியான பாகத்தை கிழக்கே ருஷிய எல்லைப்புறத்துக்கு இழுத்துக்கொண்டு போகக் காரணமாய் நின்றார்கள். பால்க்கன் நாடுகளில் பல்கேரியா தவிர இதர தேசங்கள் எதிரியுடன் சேர்ந்து கொண்டன. போர்த்துக்கல் தேசமும் அவ்விதமே எதிரிகளுடன் சேர்ந்து கொண்டது. இதையெல்லாம் நினைக்கும் போது மேல் திசையில் எவர் தமக்குப் பகைவர் எவர் உறவர் என்று தீர்மானிக்கக்கூடாத நிலைமையிலேயேஜெர்மானியர் இருந்து வருகிறார்கள். கீழ்திசையை நோக்கிலோ சீனவில் தனக்குப் பாத்தியப்பட்டதும் அநேக லக்ஷம் பவுண்களைச் செலவு செய்து அரண் செய்யப்பட்டதுமான கயச்சோ மாகாணத்தை ஜப்பானியர் எதிர்ப்பாரின்றிக் கைப்பற்றிக் கொண்டு நாளதும் தங்கள் வசமே வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றி கெய்சர் "நம்மிடத்தில் சகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டு போன கீழ்திசை மஞ்சட்கள்வன் ஒருவன் நமக்குச் சொந்தமான நாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறான். அவன் மேல் நமக்குச் சமயம் நேரும் போது நடபடி தொடர உரிமை யுண்டென்பதை இப்பொழுதே தெரிவித்துக் கொள்ளுகிறோம்" என்று தமது இயற்கைக்குரிய ஆடம்பரமான பாஷையில் எச்சரிக்கை செய்து வைத்திருக்கிறார். இவ்வித நிலைமையில் ஜெர்மானியர்கள யாரைச் சதமென்போம்; அந்நியரைத் தஞ்சமென்போமென்றே எதுவும் செய்ய வகையறியாதார்போல் மௌனமாயும் பைத்தியக்காரர் போலுமே நடித்து வருகின்றனர். ஜெர்மனியின் நிலைமை இவ்வாறிருக்க, ஐரோப்பிய தேசங்களில் பழைய காலத்து மிலேச்சர்களான நரமாம்ச பக்ஷணிகள் தங்களுள் வியாதியுடைந்தவனை தேசம் இளைத்து மாம்சம் ருசி குறைந்து விடுமென்று பயந்து உடனேயே கொன்று புதைத்து போட்டுக் கொள்வார்களாம். அதுபோல் ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கியை ஐரோப்பாக்கண்டத்து நோயாளி யென்று சொல்லிக்கொண்டே அதன் பல பாகங்களை தங்களுக்குள் பங்கிட்டு வந்தார்கள். ஆயினும் தற்சமயம் கெமால் பாஷா என்னும் வைத்தியனின் சிகிச்சையினால் துருக்கி வியாதி நீங்கி குணம் அடைந்து விட்டதாகவே ஐரோப்பாவிலும் வெளியிலும் உணரப்பெற்றுவருகிறது.

இன்னும் முன் சொன்ன மிலேச்ச ஜாதியார் ஆகாரத்துக்கு ஒன்றும் கிடையாத போது தங்களுள்ளேயே ஒருவரை ஒருவர் பிடித்துத் தின்றுவிடுவது முண்டாம். இதற்காக அந்த ஜனங்கள் தங்களுள் ஒருவரை ஒருவர் நம்பாமல் இருக்கும் போதும் நடக்கும்போதும் உறங்கும்போதுங்கூட சுயபாதுகாப்பின் பொருட்டு சதா ஆயுதந்தரித்தவர்களாகவே யிருப்பர் என்று வாசித்திருக்கிறோம். அதுபோல் ஐரோப்பிய தேசங்கள் ஒவ்வொன்றும் தமக்கருகிலும் அடுத்தாற்போலுமுள்ள தேசத்தவர் தங்களை எங்கே வைத்து எந்த நேரத்தில் பிடித்துத்தின்று விடப் போகிறார்களோ என்ற பயத்தாலும் சந்தேகத்தாலும் பீடிக்கப்பட்டவர்களாய் எப்பொழுதும் போர்க்கோலம் பூண்டவர்களாகவே விளங்குகின்றனர். இத்துடன் ஆயுத பரிஹாரண மஹாநாடு கூடி அதிலும் ஆயுத பலத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். தம் தேசத்துக்கு திரும்பிப் போனவுடனேயோ ஆயுதங்களைப் பெருக்குவதிலேயே கருத்தும் கவலையுமாயிருந்து வருகின்றனர். ஆயுத பரிஹாரண விஷயத்தில் அதிக சிரத்தை கொண்ட அமெரிக்கரும் தங்கள் கடற்படையை விர்த்தி செய்துகொள்ள பெருந்திரவியத்தைச் செலவிடத் தீர்மானித்து விட்டனர். தங்களுக்கு அருகிலுள்ள மெக்சிக்கோ தேசத்தவருடன் பல சமயம் யுத்தம் செய்பவர் போல் பயமுறுத்தல் செய்து வந்திருக்கின்றனர். இப்போதும் மெக்சிக்கோ மண்ணெண்ணெய்க் கம்பெனிகள் விஷயமாய் டை தேசத்தவர்செய்துள்ள சட்டத்தையொட்டி ஓர்க்கால் பலாத்கார முறைகளைக் கையாள்வரோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தவிர இங்கிலாந்தின் ஏகாதிபத்யத்தைச் சேர்ந்த கனடா தேசத்தவரையும் தன்னோடு சேர்த்துக்கொள்ள அமெரிக்கர் மிகு பாடுபடுவதாகத் தெரிகிறது. இதனிடையில் ஜப்பானியரும் தங்கள் கடற்படையை அதிகரித்துக் கொள்ள 100 லக்ஷம் பவுண் திட்டம் போட்டு கப்பல்களைக் கட்ட ஆர்டர் போட்டுவிட்டார்கள். கீழ்தேசங்களின் ஐக்கிய மஹாநாடு ஒன்று சென்ற ஆகஸ்டு மீ ஜப்பான் தலை நகராகிய டோக்கியாவில்தான் முதன் முறையாகக் கூடப்பட்டது. இது தெரிந்த அமெரிக்கர் கனடாவைத்துணை சேர்க்கப்பார்ப்பதுடன் மத்திய அமெரிக்க மாகாண மொன்றாகிய பெனமா கவர்ன்மெண்டுடன் உடன்படிக்கை பண்ணி யுத்தகாலத்தில் டை மாகாணத்துக்குச் சொந்தமான சகல துறை முகங்களையும் போக்கு வரவு சாதனங்களையும் தங்கள் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென்று சரத்துக்கண்டிருக்கிறார்களென்று சமீபத்தில் வெளியாகி யிருக்கிறது. இங்கிலாந்து அல்பேனியா விஷயத்தில் முன் அனுசரித்த கொள்கையை மாற்றிக்கொண்டு இத்தாலிக்கனுகூலமாக அல்பேனியாவில் விசேஷ சலுகை உண்டுபண்ணத்தக்க விதமாய் அல்பேனியருடன் இத்தாலியர் ஓர் உடன்படிக்கை செய்து கொள்வதை அனுமதித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தாலியர்களோ அல்பேனியாவோடு உடன்படிக்கை செய்து கொண்டதும் தவிர, ஜெர்மானியரோடும் ஓர் உடன்படிக்கை செய்து கையெழுத்தாகி விட்டதாக அதிகார முறைப்படி தகவல் கிடைத்திருக்கிறது. சென்ற வருஷத்தில்தான் டைரால் விஷயமாய் ஜெர்மானியர்களை இத்தாலிய டிக்டேட்டர் மூசோலனி வெகு குறைவாகவும் அலக்ஷியமாகவும் பேசியிருந்தார். இதைப்பற்றி ஜெர்மன் அக்கியமந்திரி, நாம் சுயாதீனமான நிலைமையில் இருந்தால் நமது பீரங்கிகளைக் கொண்டு மூசோலனிக்குப்பதில் சொல்லி யிருப்போம் என்று கூறியிருந்தார். அப்படிப்பட்ட இரு தேசத்தவரும் உடன்படிக்கை செய்து கொண்ட விபரம் எல்லாருக்கும் ஓர் வித ஆச்சரியத்தையே உண்டு பண்ணியிருக்கிறது. D.B. [தொடரும்.]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பல துறைக்காரிகை.

### சந்ததமும் இளமை யோடிருக்கலாம்.

லண்டனில் பிரான்லேஸ் எனும் ஓராசிரியர் கிழவனைக் குமாரனாக்கும் ஒரு திராவகங் கண்டு பிடித்திருக்கிறாராம். அத்திராவகத்தை ஊசியின் வழியாகச் சரீரத்திற் புகுத்திவிட்டவுடன் 76—வயதுடையவன் 36 வயதுப் பிராயமும் அழகு முடையவனாய் விட்டானாம். கூடிய சீக்கிரம் உலகமெங்கும் இம்முறை பரவுமென்று தெரியவருகிறது. கிழவர்களெல்லாம் குமாரனைப் போட்டிபோடலாம். இம்மருந்து நல்ல மருந்துதான்; ஆனால் சந்ததமும் இளமையோடிருக்கலாம் என்று தாயுமான சுவாமிகள் சொன்ன அருமருந்தை அறிய அனேகர் முன்வருவதில்லை. அக்காலம் வருவதெக்காலமோ?

* *

### யோக்கியதை உண்டு.

மேல்நாட்டார், நம்மிந்தியர்களுக்கு ஒரு துறையிலும் திறமைகிடையாது; அவர்களை உலகம் உள்ளளவும் இலேசாக ஆளலாமென்று நினைத்த காலமும் உண்டு. ஐரோப்பா யுத்தம் தோன்றிய பின்னர் சர்வவல்லமையும் இந்தியருக்கு உண்டு என்று சர்வதேசங்களும் குறிப்பிடுந்தன்மை ஏற்பட்டுவருகிறது. இந்தியாவை இனிச் சர்மான்யமாக ஆள முடியாதென்று ஒவ்வொரு ஐரோப்பியரும் எழுதவைத்துவிட்டபோதிலும் இந்தியர்களென்று சொல்வது மிகையாகாது. சமீபத்தில் சீமையிலிருந்து வந்த கிரிக்கட் விளையாட்டுக்காரர்களிடம் இந்தியர்களுக்கு எல்லாயோக்கியதையும் உண்டு என்பதைச் சென்னை இந்தியக் கிரிக்கட் விளையாட்டுக்காரர்கள் காட்டியிருக்கிறார்கள்.

* *

### தாஸ் ஒருவர்தான்.

வங்காளத்தில் இரட்டையாட்சி மீண்டும் ஸ்தாபிதமாய்விட்டது. ஸர். அபுதல் ரஹீமும் சக்ரவர்த்தியும் மந்திரிபதவி யேற்றுக்கொண்டனர். மந்திரிகளுக்கும் சட்டசபை ஆதரவளித்துவிட்டது. வங்காளத்தில் சுயராஜ்யக்கட்சிக்கோப்பும் நிப்புகதலாகக்காயிருந்தவர் ஸ்ரீ ஸி. ஆர். தாஸ்ஒருவர்தான் என்று இதனால் நன்கு விளங்குகிறது. தாஸ்போன்ற பல தாஸ்கள் ஏன் இருக்கக்கூடாது? உத்தியோகப் பிரமையை வளர வளரதான் ஒப்பந்தங்களெல்லாம் சிர்குலைந்து போய்விட்டன. இனியவர்கள் சட்டசபையிலிருந்தாலும் இராவிடினும் ஒன்றே.

* *

### கொல்லைவழி.

சென்னையில் ஸ்ரீமான் தணிகாசலஞ் செட்டியார் கார்பொரேஷன் தேர்தலில் தோற்றபின் கவர்ன்மெண்டால் நியமனம் பெற்றுவந்தபோது அவர் கொல்லைவழிவந்தாரென்று பலர் கூவினர்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எவ்வளவோ வாக்கு வன்மையுடையவராயிருந்தும் சென்னை சுயராஜ்யக் கட்சிக்கு உயிர் நாடியாயிருந்தும் அவர் கட்சித்தலைவர் தேர்தலில் உபதலைவர் பதவியாவது அவருக்குக் கிடைக்கவில்லை. பின்னர் பெரும்பிரயாசையின் மேல் ஸ்தானம் பெற்ற உபதலைவரை காலிபண்ணச்செய்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அந்த ஸ்தானத்தை அடைந்தார். இவர்வந்தது கொல்லைவழியா? குறுக்குவழியா? நேர்வழியாவென்று கேட்கின்றோம்.

* *

### சென்னைக்கீடுண்டா?

நமது சென்னைமாகாணமே ஸ்திரீகள் கல்வியில் முன்னேற்றத்திலும் முதன்மையாக விளங்குகிறதென்று அகிலஇந்திய ஸ்திரீகள் மகாநாட்டில் தலைமைவகித்த பரோடா மகாராணி சிலபுள்ளி விபரங்கள் போட்டுக்காட்டியவிபரம்முன்பு குறிப்பிட்டோம். ஸ்திரீ சுதந்திரத்திலும் சென்னையே முன்னிற்கிறது. டாக்டர் முத்துலட்சுமி அம்மாளுக்கு சட்டசபை அங்கத்தினர் நியமனங்கிடைத்திருப்பதுடன், சபைக்கு உபதலைவர் தேர்தலிலும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. மற்றெந்த மாகாணத்திலும் ஸ்திரீகள் விஷயத்தில் இம்மாதிரி நடக்கவில்லை பம்பாயில் பெண்கள் பகீரதப்பிரயத்தனம் பண்ணியும் பலிக்கவில்லை. ஆகவே சென்னைக்கீடுண்டா வென்று கேட்டோம்.

* *

### கடவுளா பிசாசா!

ஹைதராபாத் சரிர்ஷரில் முன்ஸிப் சையத்பியாஸ்குஸேன் வீட்டில் ஒரு பிசாசு அடிக்கடி வருகிறதாம். வீட்டுக் கூரையிலிருந்து கற்களும் சில சமயம் சாப்பிடும் வஸ்துக்களும் மற்றச்சாமான்களும் வந்துவிழுகின்றனவாம். அது சேட்டைகளெல்லாம் கொடுக்கிறதாம். காணமற்போனவைகளையும் கொண்டு வந்து தருகிறதாம். அந்த முன்ஸீபுக்கு பேய் பிசாசுகள் மீது நம்பிக்கை கிடையாது; ஆயினும் பிசாசு தாம் வேண்டியவைகளையெல்லாம் தருகிறதென்றால் அது கடவுளா பிசாசா வென்றறிய முண்டாகலாம்.

* *

### விசேஷ ஆராய்ச்சி.

மனிதன் வரவர விசேஷ அறிவுடையவனாகவும் ஆராய்ச்சியுடையவனாகவும் வந்துகொண்டிருக்கிறான் என்றதற்கு புதுமையான விஷயங்களை ஒவ்வொரு நாளிலும் பார்க்கின்றோம். சிறிது நாளைக்குமுன் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் டெலிபோன் மூலம் பேச்சுகள் பேசப்படுகிறதாக அறிந்தோம். இப்போது கடல்வழியாகச்செல்லும் தந்திக்கம்பியின் மூலம் ஒரு நிமிஷத்தில் 8500 மைல் வேலைபார்க்கலாமென்று ஒரு பரீட்சை பார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஞானமார்க்கமாய் பலரகசியங்களைக் கண்டுபிடிக்கும் பெரும் பாகதகள் அவர்கள் ஆராய்ச்சிக்கு இன்னும் அகப்படவில்லை

* *

### சம்மதம் தந்துளார்.

சென்னைச்சட்டசபையில் முன்னர் நிறைவேறிய இந்துமததர்ம பரிபாலன மசோதாவை அங்கீகரிக்கக்கூடாதென்று ஐயங்கார், ஐயர்கூட்டங்கள் அரும்பாடுபட்டு டெபுடேஷன்கள்சென்றன. அதைக்குறித்தே நேற்றுநடந்த சட்டசபையிலும் ஒரு தீர்மானங்கொண்டு வாதிட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால்சட்டசபை திறந்தவுடனே அரசப்பிரதிநிதி அதற்கு சம்மதந்தந்துளார் என்று கவர்னர் கூறிவிட்டார். இது பெரும்பாலான சுயராஜ்யக்கட்சிக்கும் பிராமணர்களுக்கும் பெரும் ஏமாற்றமாகத்தானிருக்கும். எத்தனையோ பேர்கள் முகமொடிந்திருக்கக்கூடும் தனிப்பட்ட வருப்பாருக்கும் மசோதாவினால் பல இடைஞ்சலுண்டாகுமென்று கருதிய தபிமானிகள் போல் பல திருத்தங்கள் கொண்டுவந்த சுயராஜ்யக்கட்சியார், அக்குறைகளை நிவர்த்திக்க இனிமேலந்தத் தீர்மானங்களைக் கொண்டுவருவார்களா? குறைகளிருந்தால் பின்னால் சீர்திருத்தங்கள் செய்து நிவர்த்திக்கலாமென்று உறுதிகூறிய ஜஸ்டிஸ் கட்சியாராயினும் கவனம் செலுத்துவார்களா?

* *

### திருட்டுக்கலியாண வழக்கு.

கும்பகோணம் சுப்பிரமணியய்யர், பிச்சுசாஸ்திரி, பாலகுஜாம்பாள் ஆகிய மூவரும் பிராமணரல்லாத பார்வதி பென்னும் கூலிப்பெண்ணைப்பிராமணப் பெண்ணென்று ஒரு ஆந்திர தேசத்துப்பிராமணனுக்குத் திருட்டுத்தனமாக பணத்தாசைகொண்டு திருவெழுந்தூரில்ப் போய்க் கலியாணம் செய்துகொடுத்ததாகவுள்ள ஒரு வழக்கு நடந்து ஜட்ஜு குற்றவாளிகட்கு முறையே 2½ வருடம் 2 வருடம் 2 மாதம் வெறுங்காவல்த் தண்டனை விதித்திருக்கிறார். இதற்கு முன்னும் இதே மாதிரி இரண்டொரு வழக்குகள் நடந்திருப்பதாய்த்தெரிகின்றது. இதனால் டம்பாச்சாரி குலேபகாவலி முதலிய சில நாடகங்களில் கூட்டிக்கொடுக்கும்............என்று நடிகர்கள் தமாஷாக நடிப்பது உண்மையாகவிருப்பது விளங்குகிறது.

---

## ஓர் வேண்டுகோள்.

(நொண்டிச்சிந்து.)

நாடார் குல பக்தரே—இங்கு
நவிலப்புகும் விஷயம் கேட்டருள்வீர்
வறுமையின் பிணிநீங்க—நமக்கு
வகையுடன் வளர்ந்ததே ஒருகாலம்
நாடெங்கும் கீர்த்தி பெறும்—இந்த
நாடார் குல மித்திரன் பத்திராதிபர்
அருப்புக்கோட்டை வாழும்—ஸ்ரீமான்
சூவன்னா ஆவன்னா முத்து நாடார்
க்ஷேமநிதி தர்மப்பண்டு—என்னும்
க்ஷேமம் கொண்ட லாட்டரியை இயற்றியுள்ளார்
ஏழையின் வறுமை போக்க—இனி
மித்திரன் இடையூறும் நிவர்த்தியாச்சு
க்ஷத்திரிய ரத்தினங்காள்!—பலரும்
சந்தோஷமாய் ஒத்துழைத்து ஜெயம்பெறுவோம்
லாட்டரியின் ரசீது பெற்று—அதனால்
அவரவர் தம்முடைய அதிஷ்டம் பார்ப்போம்
நாடார் குல தீபம்—எல்லா
நாடோறும் ஜொலித்திட நாமுயற்சிப்போம்
கே. எம். தேவ சகாயம்—நாடார்
பாடும் நொண்டிச்சிந்தை பார்த்திரங்குவோம்

எங்குல சகோதரர்காள்!

நங்குல திலகமான ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள் பலருக்கும் உபயோகமான க்ஷேம நிதி தர்மப்பண்டு லாட்டரி இயற்றியிருப்பதால் நாம் பலரும் ஏக மனதுடன் லாட்டரி ரசீதுகளை வரவேற்று நம் அதிஷ்ட காலத்தையும், தர்மமே ஜெயம் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் அணிந்து கொள்ள வேண்டுமென்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே. எம். தேவசகாய நாடார்.

---


முத்துங்கள்! முத்துங்கள்!! சில பிரதிகளே கைவசமிருக்கின்றன.

என் ஏழைச் சகோதரர்களே! ஏன் கவலைப்படுகின்றீர்கள்?

50 ரூபாய் முதல் 500 ரூபாய்வரை மாதம் சம்பாதிக்கலாம்.

**கைத்தொழில் வணிக இரகஸ்யம்.**

இதில் சோப்புகள், மெழுகுவர்த்தி, நெருப்புக்குச்சி, பேப்பர் மெண்ட், பிஸ்கட், கேக்குகள், வாசனை எண்ணெய்கள், சாம்பிராணிவர்த்திகள், பன்னீர், சர்பத்துகள், இங்கி பூட் பலீஸ், வார்னிஷ், சாயங்கள், பலவித மருந்துகள், காகிதம், பென்சல் முதலியவைகள் செய்யும் முறைகளுடன் 200 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம்ரூ1—8—0. உடனே எழுதுங்கள். எல்லாவிதமான தமிழ் புஸ்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

ஜயலக்ஷிமி புஸ்தகசாலை,

25· வெங்கடமேஸ்திரி வீதி, மண்ணடி, மதராஸ்.



**திருச்சியில் நாடார் ஹோட்டல்.**

திருச்சினாப்பள்ளி கோட்டை, சின்னசவுக்கில் "நாடார் லாட்ஜ்" என்ற பெயருடன் கைதேர்ந்த பாகஸ்தர்களைக் கொண்டு ஒரு புதிய ஹோட்டல் ஏற்படுத்தி அறுசுவையுடன் அமுதளித்து வருகிறோம். தனிபாகவும் குடும்ப சகிதமாகவும் தங்கிப் போவதற்கு தக்கவசதியும், ஸ்நானஞ்செய்வதற்கு மிக்க சௌகரியமும் செய்திருக்கிறோம். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், வியாபாரிகள் முதலிய யாபேருக்கும் அவரவர் சௌகரியப்படி செய்து திருப்திபளிக்கத் தயாராயிருக்கிறோம் சாமான் முதலியன பந்தோபஸ்து செய்யவும் இடங் கொடுக்கப்படும். வந்து ஆத்ம திருப்தி செய்து எம்மை ஆசீர் வதிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

விலாசம்:—வே. பொன்னைபாநாடார்,

புரோப்ரைட்டர் "நாடார்லாட்ஜ்"

சின்ன சவுக்கு, தெப்பக்குளம் (போஸ்ட்)

திருச்சினாப்பள்ளி கோட்டை.



**தேவை.**

மதுரை, நாடார்பிரஸுக்கு ஒரு ஏஜெண்டு தேவை. சம்பளம ரூ 45-0-0. காஷ் செக்கூரிட்டி அல்லது எதுப்பு ரூ 300 கட்டவேண்டும். அச்சாபீஸ்களிலிருந்து அனுபோகப்பட்டவர்களும், இங்கிலீஷ் நன்றாய்த் தெரிந்தவர்களும் புக்கீப்பிங் அண்டு அக்கவுண்டிங் தெரிந்தவர்களுந்தான் கீழ் கண்டவருக்கு மனுச்செய்யவேண்டும்.

A. பொன்னையா B. A.

வக்கீல்

மேலமாசி வீதி, மதுரை.



**ரூ100 முதல் ரூ1000**

பிரதிமாதம் "அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற புதிய புத்தகத்தைப் படித்து முடித்ததும் சம்பாதிக்கத் தொடங்கலாம். அபூர்வ முறைகளும் விசேஷ சம்பாத்ய ரகஸ்யங்களும் அடங்கியுள்ளன. விலை அணா பனிரெண்டு. வி. பி. தபால்செலவு பிரத்தியேகம். வெளிநாட்டு நண்பர்கள் ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆர். சேஷன், எடிட்டர்,

ஸ்ரீரங்கம்,

திருச்சினாப்பள்ளி.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஞு மே மீ 4 உ க்கு பிரபவ ஞு
சித்திரை மீ 22 உ. பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ 1500 | 3-வது பிரைஸ் | ரூ 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ 400 | 100 ரூ-ல் 5-க்கு | ரூ 500 |
| 250 ரூ-ல் 0-க்கு | ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்கு | ரூ 1000 |
| 10 ரூ-ல் 100-க்கு | ரூ 1000 | 5 ரூ-ல் 200-க்கு | ரூ 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்கு | ரூ 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ 100 | 2-வது பிரைஸ் | ரூ 50 |
| 3-வது பிரைஸ் | ரூ 20 | 4-வது பிரைஸ் | ரூ 15 |
| 5-வது பிரைஸ் | ரூ 10 | | |
| 6-முதல் 10 வரை 5 விதம் | ரூ 25 | | |
| 11-முதல் 750-வரை 2 விதம் | ரூ 1480 | | |
| ஆக | ரூ 1700 | | |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்ந்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினுல் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானுல் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.


## துண்டுத் துணுக்குகள்.

மழை பெய்யும்பொழுது ஒருவித எறும்பு இலைகளையும் புஷ்ப இதழ்களையும் குடையாகப் பிடித்துச் செல்கின்றதாம்.

* *

வெயிட் என்னும் ஒரு சிறிய தீவில் குழந்தைகளின் தொகையைவிட நாய்களின் தொகை அதிகமாம்.

* *

டில்லியில் புதியதோர் மருதி கட்டுதற்கு இராஜப் பிரதிநிதியின் வேண்டுகோளை மதித்து லார்டு இஞ்சகேப் ஒரு லக்ஷம் ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார்.

* *

சைத்தை ஓராண்டில் பத்து லக்ஷம் குழந்தைகளை ஈனுமாம்.

* *

குழந்தைகளின் எலும்புகளை கட்டிப்படுத்தலிற் ஆரஞ்சுப்பழத்தை உபயோகப் படுத்துவதிலும் மேலானது பிறிதொன்றின்றும்.

* *

ஒரு பொருளை அதனினும் 120 லக்ஷம் மடங்கு பெருக்கிக்காட்டும் பூதக்கண்ணாடிகள் அணுப்பிரமாண முள்ள பூச்சிகளைக்காண உபயோகப்படுத்தப்படுகிறதாம்.

* *

எலிகள் ஊண்தேட 190 மைல் வரையும் போய் வருவதாகப் பரீக்ஷித்தவர்கள் மூலம் தெரியவருகிறது.

* *

இயற்கைச் சூரிய வெப்பத்தையொப்பத் தருவதான செயற்கை சூரிய இயந்திரம் ஒன்றை ஜெர்மனியில் விஞ்ஞானப் புலவரொருவர்கண்டுபிடித்திருக்கின்றனராம். சாதாரணமாய்ச் சட்டை ஜோப்பிலும் போட்டுக் கொள்ளக்கூடியவாறு, அவ்வளவு சிறிதாக அமைத்திருக்கின்றனராம்.

* *

இருபதாண்டுகளுக்கு முன்னர் ரணசிகிச்சை செய்துகொண்ட ஒரு மாதுக்கு மறுமுறையும் ரணசிகிச்சை செய்யும்படி இங்கிலாந்தில் ஏற்பட்டது. முன்முறை சிகிச்சைசெய்தபோது தவறுதலாக விடப்பட்ட இரு கத்தரிக்கோல்கள் அம்மாதின் உடம்பினுள்ளிருந்து இம்முறை எடுக்கப் பட்டனவாம்.

* *

அமெரிக்காவிலுள்ள கஸ்ட்காம்ஸ்டாக் என்பவன் ஓர் பந்தயத்தில் 62 கோப்பை காபி குடித்து வெற்றி பெற்றுனும்.

* *

இராஜப்பிரதிநிதியின் மனையாட்டியார் டில்லியிலுள்ள பெத்தூன் கல்லூரிக்குச் சென்றகாலத்து அவரது கால்களில் மலர்களை கொட்டும்படி மாணவிகளை ஏற்பாடு செய்திருந்தனராம்; ஆனல் மாணவிகள் அதற்கு உடன்பட்டிலர்.

* *

ஆஸ்டிரியா நாட்டிலுள்ள ஜெர்மனி எல்லைப்புறத்தில் பெர் நாடுஷீன் பெர்க் என்பவர் 76 குழந்தைகளுடன் வாழ்கின்றனராம். 76 குழந்தைகள் எவ்விதமெனில், முதல்மனைவி நான்கு முறை நாலுகுழந்தைகள் வீதமும், எழுமுறை மூனறுகுழந்தைகள் வீதமும் பதினறுமுறை இரண்டு குழந்தைகள்வீதமுமாஈன்றனவாம். அவனின் 56-வதுவயதில் முதல் மனைவி இறக்கவே இரண்டாவதாகவந்த மனைவியும் 10 பிள்ளைகளைப் பெற்று மூன்று இறந்தொழிய 7 பாக்கி ஆக 76 குழந்தைகளிருக்கின்றனவாம்.

* *

லெரிடாவில் ஸ்ரீமான் காலிட்டோ ஆர் பெரோ என்பவர் ஒரு புதுமாதிரிக் கெடியாரத்தை ஆக்கியுளார். ஒருமுறை சாவி கொடுத்த பின்னர் எப்போதும் ஓடிக்கொண்டிருக்குமாம். விநாடி, நிமிஷம், மணி, நாள், வாரம், மாசம், வருடம் முதலியவைகளை ஒரே நேரத்தில் எப்போதும் காட்டுகிறது. சுமார் 800 சில்லறைச் சாமான்களால் அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

* *

பிரான்சில் சிறிது காலத்துக்கு முன்னர் அடித்த பெரும் புயற்காற்றினுல் இரத்த மழை வருஷித்ததாம். சிலவிடங்களில் வேறுவித நிறமான மழையும் பொழிந்ததாம். ஆராய்ச்சிக்காரர்கள் இவ்வகை நிறத்துக்கு ஆகாயத்திலுள்ள தூசியின் பலவகைப்பட்டுவர்ணங்களே காரணமெனக் கூறுகின்றனர்.

* *

டில்லியில் புதிதாகக் கட்டப்பட்ட சட்டசபைக்கட்டடத்தை ராஜப்பிரதிநிதி 18—1—27-ல் திறந்து வைத்திருக்கிறார்.

* *

விருதுநகர் நகர சபையில் சேலம் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியரால் மகாத்மாகாந்தி உருவப்படமும் மதுரை எல். கே. துளசிராம் அவர்களால் வி. ஆர். தாஸ் உருவப்படமும் தைமீ 7உ திறந்துவைக்கப் பெற்றிருக்கின்றன.

* *

ஜமைக்காதீவில் குடியேறியிருந்த இந்தியர்களில் 685 பேர்வரை 30—11—27-ல் திரும்பி வருவார்களெனத் தெரிகிறது.

* *

நாகபட்டணம் முனிஸிபல் சபையின் ஆதிக்கத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ராட்டினத்தில் நூல் நூற்கக்கற்றுக் கொடுக்கத் தீர்மானமாகியிருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை
## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி
## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஞு மே மீ 4 உ க்கு பிரபவ ஞு
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் ரூ | 1500 | 3-வது பிரைஸ் ரூ | 1000 |
| 4-வது பிரைஸ் ரூ | 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு ரூ | 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 250 ரூ-ல் 0-க்கு ரூ | 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்குரூ | 1000 |
| 8 ரூ-ல் 600-க்கு ரூ | 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

தனிப் பிரைஸ் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பிரைஸ் ரூ | 100 | 2-வது பிரைஸ் ரூ | 50 |
| 3-வது பிரைஸ் ரூ | 20 | 4-வது பிரைஸ் ரூ | 15 |
| 5-வது பிரைஸ் ரூ | 10 | | |
| 6-முதல் 10 வரை 5 விதம் ரூ | 25 | | |
| 11-முதல் 750-வரை 2 விதம் ரூ | 1480 | | |
| ஆக ரூ | 1700 | | |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை

## போலிப்பொடிகளின்கேலி இனிசெல்லாது

24 தங்கமெடல்கள் பரிசுபெற்று ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிகள் குவியப்பெற்ற

## மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

# ஸ்பேஷல்பட்டணம்பொடி

## காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகின்றன.

உபயோகித்த கனவான்கள் மனதை குதூகலிக்கச் செய்கிறது.

## தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.


[2-ம் பக்கத்தின் தொடர்பு.]

சொல்ல முடியாது" என்று சொல்லுவது பல ஹீனத்தையும், வெறுக்க வேண்டிய விஷயத்தில் ஆசையிருந்து வருவதையும் தான் காட்டுகிறது. இதனைப்போல்ஒரு முடிவான அபிப்பிராயத்திற்கு வருவதில் என்ன சிரமமிருக்கிறது? பாம்பு என்னைக்கடித்து விடுமென்று தெரிவதால் அதனிடத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் ஓடி விடுகிறேன் பிரதிக்ஞைசெய்துகொள்ளுகிறேன். அந்தப்பாம்பிலிருந்து தப்புவித்து ஓடிவிட நான் முயற்சி செய்வதுடன் நின்றுவிடவில்லை. முயற்சி செய்வதுடன் நின்றுவிட்டால் மரணம் நிச்சயம் என்றும், முயற்சியானது பாம்பு என்னைக் கொன்றுவிடுமென்று தெரிந்துகொள்ளாமல் விருப்பதையும் காட்டுகிறது. நான் முயற்சி செய்வதுடன் இருந்துவிடுவேனெனில் திடமாகக் காரியத்தைச் செய்ய வேண்டிய அவசியத்தை நான் உணரவில்லை யென்பதைக் காட்டுகிறது. "எதிர் காலத்தில் என்னுடைய அபிப்பிராயம் மாறிவிடுகிறதென்று வைத்துக் கொள்வோம். எவ்விதம் நான் பிரதிக்ஞை செய்து கொள்ள முடியும்? என்று கேட்கலாம். இத்தகைய சந்தேகங்கள் நம்மை ஒன்றும் செய்யாமல் தடுத்து விடுகின்றன. இந்த சந்தேகமானது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் துறந்துவிட வேண்டிய அவசியத்தை நாம் உணராததையும் காட்டுகிறது. ஆகையால் தான் ஒரு விஷயத்தில் அருவருப்பில்லாமல் அதைத் துறப்பதுநீடித்திருக்கக் கூடியதன்று" என்று நிஷ்குளானந்தா சொல்லியிருக்கிறார். ஒரு விஷயத்திலுள்ள ஆசை போய்விட்டால் அதை இனி விடுவதில்லை யென்று சங்கல்பம் செய்து கொள்ளாமலிருப்பதற்கில்லை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection